பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று



[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

	ரூ. அ.
வருட சந்தா	3—0
6 மாத சந்தா	1—12
வெளி நாட்டிற்கு சந்தா ...	4—0
விளம்பரம் அங்குலம் 1-க்கு ...	0—8

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஹூ வைகாசி-மீ 10-உ (23—5—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் ௪.

மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப் பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப்பீசுகள் ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சுவேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100-க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும்முன் பணமாக அனுப்பவேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிபோ, திருப்பூர், (தென் இந்தியா,)

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் அத்தாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் செவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடிய தரமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள். ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை திணுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,
ராம விலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ் ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி கத்தர்இலாகா

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஹூ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும், வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும், எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்து கொள்ளலாம்.

மதராஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதராஸ்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
வைத்துக்குளி S. I. Ry.

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைபீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி திணுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக திணுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான திணுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

ஏழாயிரம் பண்ணை பாலிய நாடார் சங்கத்தின் இரண்டாவதாண்டு கொண்டாட்டம்.

ஏழாயிரம் பண்ணை அம்பிகையம்மன் கோவிலுக்கு முன்பாகத்தில் அமைக்கப் பட்டிருந்த கொட்டகையில் 16-5-26உ ஞாயிற்றுகிழமை மாலை 5-மணிக்கு ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ்கூடிற்று. பல இடங்களிலிருந்தும் சுமார் 2000 ஜனங்கள் வந்திருந்தார்கள். முதலில் ஸ்ரீமான் செ. க. சொ. அருணைகிரி நாடார் கடவுள் வணக்கம் சொன்னவுடன் ஸ்ரீமான் நாயக்கரை அக்கிராசனராக ஸ்ரீமான் க. ரு. ரு. காளியப்ப நாடாரால் பிரேரேபிக்க ஸ்ரீமான் மு. ச. வள்ளிய நாடாரால் ஆமோதிக்க ஸ்ரீமான் வெ. அ. மா. பா. மாரியப்ப நாடாரால் ஆதரிக்க ஏகமனதாய் நிறைவேறி ஸ்ரீமான் நாயக்கர் அக்கிராசனம் ஏற்றதும் ஸ்ரீமான் வெ. அ. மா. பா. மாரியப்ப நாடாரால் ஸ்ரீமான் நாயக்கருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான் நாயக்கர் உபசாரப்பத்திரத்திற்கு பதிலளித்து முகவுரையாகச் சில வார்த்தைகள் சொல்லிய பிறகு காரியதரிசியால் சங்கத்தின் அறிக்கை வாசிக்கப்பட்டது. அறிக்கையின் சுருக்கமாவது:—

ஏழாயிரம்பண்ணை பால்ய நாடார் சங்கம். 2-வது வருஷ அறிக்கைப் பத்திரம்

ஒரு ஜன சமூகத்தின் முற்போக்கை நிர்ணயிக்கவேண்டுமானால், அந்த ஜன சமூகத்தின் முற்போக்குக்கு வழிகாட்டியாக இருக்கும் சங்கத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம். எனவே ஜன சமூக சங்கமானது அந்த ஜன சமூகத்தின் முற்போக்கை பிரகாசிக்கச் செய்யும் தூண்டுகோல் என்பது தெற்றென விளங்கும்.

தற்சமயம் சங்கத்தில் 40 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். சங்கத்தின் அங்கத்தினர் தொகை மிகக் குறைவாக இருப்பதால் சங்கத்தின் நோக்கங்களை அமுலுக்கு கொண்டுவர சக்தியற்றதாய் இருந்து வந்திருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் சங்கத்தின் நோக்கங்கள் சித்திபெறுமென்று நம்புகிறோம்.

இச் சங்கத்தின் முதலாவது நோக்கம் "நாடார்சமூகம் நியாயமும் சமாதானமுமான வழிகளால், ஒற்றுமை, கல்வி, நல்லொழுக்கம் முதலிய துறைகளில் அபிவிருத்தியடையும்படி செய்தல்." இத்துறையில் இச் சங்கத்தார் சிறிதளவு முயற்சி எடுத்திருந்தாலும், கூடிய சீக்கிரத்தில் அவைகளை நிறைவேற்ற பூரண பிரயத்தனம் செய்வார்களென்று நம்புகிறோம்.

இச் சங்கத்தில் இரண்டாவது நோக்கமாகிய "நாடார் மஹாஜன சங்கத்தின் தீர்மானங்களை அமுலுக்கு கொண்டுவரல்" என்ற விஷயத்தில் இச் சங்கத்தார் தங்களால் இயன்ற அளவு நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இச் சங்கத்தின் மூன்றாவது நோக்கம் "நாடார்களுக்கும் இதர வகுப்பினர்களுக்கும் ஐக்கிய உணர்ச்சியை உண்டுபண்ணல்." இத்துறையில் இச்சங்கத்தார் வேண்டிய பிரயத்தனம் செய்துவருகிறார்கள்.

இச் சங்கத்தின் நான்காவது நோக்கம் "வாசகசாலை ஒன்று ஏற்படுத்தல்." மனிதனுடைய இகலோக வாழ்க்கைக்குரித்தான கடமைகளைச் செய்யவும் ஆத்மஞான அபிவிர்த்திக்கான காரியங்களைச் செய்யவும் மனிதன் தன்னுடைய அறிவை விருத்தி செய்யவேண்டும்.

சங்கத்தின் ஐந்தாவது நோக்கம் "தர்மஸ்தாபன பரிபாலனங்களை ஒழுக்கான முறையில் நடத்தல்" இவ்வூரிலுள்ள நாடார்களுக்கு சொந்தமாக கோவில்கள், கூடங்கள், பேட்டை முதலிய தர்மஸ்தாபனங்கள் இருக்கின்றன. மகமை ஒழுங்காக நடைபெறாததால் தர்ம ஸ்தாபனங்களின் பரிபாலனங்கள் சரியாக நடைபெறவில்லை. இத்துறையில் இச்சங்கத்தார் இன்னும் ஜாஸ்தி அங்கத்தினர்களைச் சேர்த்து அதன் பின் அவைகளை சீர் திருத்தம் செய்வதாக யோசித்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் இக் குறைகள் நிவர்த்தியாகிவிடுமென்று நம்புகிறோம்.

ஈஸ்வர பக்தியுடன் ஒவ்வொரு காரியங்களையும் செய்வதே நன்மை பயக்குமென்னும் நோக்கத்துடன் இச் சங்கத்தார் திரு ஆனந்த நடராஜப்பெருமான் பஜனை சபை ஒன்று ஏற்படுத்தி, கடந்த இரண்டு வருஷ காலமாக வாரந்தோறும் பிரதி வெள்ளிக்கிழமை இரவிலும் திரு ஆனந்த நடராஜ பெருமானை பக்தியுடன் பஜனைசெய்தும், பிரதி மாதங்களிலும் மாதாந்த வெள்ளிதோறும் விடுமுறைநாள் ஏற்படுத்தி சமய ஞானத்தைப்பற்றியும், குல முன்னேற்றத்தைப்பற்றியும், பல உபந்நியாசங்கள் செய்தும், ஒவ்வொரு வருஷங்களிலும் மார்கழி மாதத்தில் ஆருத்திரா தரிசன உற்சவமும் நடத்திவருகிறார்கள். ஷெ பஜனை சபாவின் மூலதனத்திற்காக லாட்டரி சீட்டு ஒன்று நடத்தி அதில் கிடைத்த வருமானத்தை முன்னிருப்பு மூலதனத்துடன் சேர்த்து வைத்திருக்கிறோம்.

முதலாவதாண்டு நிறைவு விழாவுக்குப் பின், சென்ற குரோதன-ஹூ பங்குனி-மீ 30-உ முடிய 8 கமிட்டிகளில் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

வரவு செலவு விபரம்.

ரக்தாக்ஷி-ஹூ சித்திரை-மீ 1-உ முதல் குரோதன-ஹூ பங்குனி-மீ 30-உ முடிய

வரவு விபரம்.

முன்னிருப்பு	ரூ	75—0—0
சந்தா	ரூ	36—0—0
உண்டியல்	ரூ	22—0—0
லாட்டரி சீட்டு ஆதாயம்	ரூ	225—0—0
நன்கொடை	ரூ	140—0—0
ஆக மொத்தம்	ரூ	498—0—0

செலவு விபரம்.

பஜனை சபா அறை செப்பனிட	ரூ	13—4—0
பஜனை கோஷ்டி	ரூ	15—1—0
பேப்பர் என்னை	ரூ	10—8—0
தபால்	ரூ	5—4—0
புஸ்தகம்	ரூ	1—8—0
ஆருத்திரா தரிசன திருவிழாவுக்கு	ரூ	125—0—0
ஆக செலவு	ரூ	170—13—0
நீக்கி இருப்பு	ரூ	327—3—0

இருப்பு விபரம்.

பொக்கிஷதார் ஸ்ரீமான் வே. தொ. சி. ப. பழனிக்குமாரு நாடாரவர்கள் வசம் முக்காலேயரைக்கால் வட்டியாக இருப்பு	ரூ	300—0—0
ஸ்ரீமான் சி. சொ. குருசாமி நாடாரவர்கள் வசம் இருப்பு.	ரூ	27—3—0
ஆக இருப்பு	ரூ	327—3—0

நாடார் குலத்தவர்களின் அபிவிருத்தியை முன்னிட்டு நல்லெண்ணத்துடன் ஏற்படுத்தப்பட்ட இச் சங்கத்தை ஒவ்வொருவரும் ஆதரித்து வேண்டிய ஒத்தாசை புரியும்படி எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

செ. க. சொ. அருணைகிரி நாடார்,
பிரசிடெண்டு.
சி. சொ. அண்ணாமலை நாடார்,
க. அ. கணபதி நாடார், காரியதரிசிகள்.
வே. தொ. சி. ப. பழனிக்குமாரு நாடார்,
பொக்கிஷதார்.

அறிக்கைப்பத்திரம் வாசித்த உடன் கொம்மங்கிபுரம் ஸ்ரீமான் வ. பெ. ஸ்ரீனிவாச நாயுடுவால் மனித சமூகமும் சமயநெறியும் என்பது பற்றி ஒரு அருமையான உபந்யாசம் செய்யப்பட்டது. பிறகு சாத்தூர் வக்கீல் ஸ்ரீமான் வி. எஸ். ஜீ. மாணிக்க நாடார் B. A., B. L. அவர்களால் நாடார் குல முன்னேற்றம் என்பது பற்றி ஒரு தெளிவான உபந்யாசம் செய்யப்பட்டது. பிறகு அக்கிராசனரின் முடிவுரை கூறப்பட்டு கடைசியில் சங்கத்தின் நோக்கங்களைப் புகழ்ந்தும் சங்கத்தின் அபிவிருத்தியைக் குறித்தும் பேசியதின் சாராம்சம்:—

அக்கிராசனர் பிரசங்கம்.

அன்புள்ள வாலிப நாடார் சகோதரர்களே! தங்கள் சங்கத்தின் நோக்கங்களைக் காண எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. முதலாவது நோக்கமாக நாடார் சமூகம் அபிவிருத்தி அடையும்படி செய்தல் என்று வைத்திருக்கிறீர்கள். இது தான் உண்மையான நாடாராய் பிறந்தவர்கள் செய்ய வேண்டிய காரியம் "நல்லாண்மை என்பது ஒருவருக்குத் தான் பிறந்த, இல்லாண்மை யாக்கிக் கொளல்" என்று நாயனார் சொல்லியிருப்பதின் தத்துவம் இதுதான். ஒவ்வொரு சமூகமும் தன் சமூக முன்னேற்றத்தை சீர்திருத்திக்கொண்டு பிறகு எல்லாச் சமூகத்தின் நன்மையையும் பொது நன்மையையும் கவனித்தால் தான் அது முறையாகவும் பயனளிக்கக் கூடியதாகவும் இருக்கும். அஃதில்லாமல் தங்கள் சமூகம் சுயமரியாதை அற்றதாகவும், தீண்டாத சமூகமாகவும் இருப்பதை லக்ஷியம் செய்யாமலும், அதைப்பற்றி உணர்ச்சியில்லாமலும், நான்தேசபக்தன், பொதுஜனசேவை செய்பவன் என்று சொல்லிக்கொண்டு பொது உரிமை பொதுச் சுதந்திரம் என்று பேசுவதெல்லாம் பொருளற்றதும் அறியாமையும் தனது சுய நலத்திற்கும் சுய கீர்த்திக்கும் பாடு படுவதுமே ஒழிய வேறல்ல. ஏனெனில் நமது நாடு எக்காரணம் பற்றியோ பல சமூகங்களாக அமைக்கப்பட்டு

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க.)

பட்டாபிஷேகம்.

மச்சான் இறந்தால் நல்லதாச்சு அவருடைய கம்பளி நமக்காச்சு.

(சித்திரபுத்திரன் எழுதுவது)

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்காருக்கு எல்லா இந்தியத் தலைமைப் பட்டாபிஷேகம் ஆகிவிட்டது. ஆனால் அது இரண்டு மாதத்திற்கு என்று சொல்லப்பட்டாலும் காயமானதென்பதுதான் நமது அபிப்பிராயம். பண்டித நேரு இரண்டு மாதத்திற்கு ஓய்வு எடுத்துக்கொள்ளுகிறதாய்ச் சொல்லி தனது விசேஷ அதிகாரத்தால் ஸ்ரீமான் ஐயங்காருக்குப் பட்டாபிஷேகம் செய்து தலைமைப் பதவியை அவர் தலையில் சூட்டிவிட்டுப் போய்விட்டார். இது மகாத்மா ஓய்வெடுத்துக் கொண்டது போலவேதான் முடியும். "வெற்றிமேல் வெற்றி ஏற்பட்டு, இரட்டை ஆட்சி மடிந்தவுடன்" அதற்குமேல் என்ன செய்வதென்று தெரியாமல் ஸ்ரீமான் சி. ஆர். தாஸ் நிரந்தர ஓய்வெடுத்துக்கொண்டார். சுயராஜ்யக்கட்சி வெற்றி அடைந்து காங்கிரசையே தனக்குள் ஐக்கியப்படுத்திக்கொண்டவுடன் இனி நமக்கு இங்கென்ன வேலை, என்று மகாத்மா ஓய்வெடுத்துக்கொண்டார். அதோடு நிர்மாணத் திட்டங்களும் ஓய்வெடுத்துக்கொண்டன. இப்போது பண்டித நேரு சாதி ஒப்பந்தம் முடிந்தவுடன் இனி எப்படி ஜனங்கள் முகத்தில் விழிப்பது என்று ஓய்வெடுத்துக்கொண்டார். இது எதற்காகவோ தெரியவில்லை. சட்டசபையை விட்டு வெளியேறின வீரத்திற்கா? அந்த வீரத்தைக்காப்பாற்றி மறுபடியும் சட்டசபையை எட்டிப்பார்க்காமல் இருக்கிற சுத்தத்திற்கா? சபர்மதியில் பரஸ்பர ஒத்துழைப்பாளருக்கும் தங்களுக்கும் ஏற்பட்ட ராஜியை கண்ணியமாய் நடத்தி வைத்துக்கொடுத்த ஆண்மைக்கா, சத்தியத்திற்கா? எதற்கென்று அறிய முடியவில்லை ஆனாலும் "தான் பரஸ்பர ஒத்துழைப்பாதாரிடம் செய்துகொண்டு கையெழுத்துப் போட்ட ராஜியை எப்பொழுது நிறைவேற்றி வைக்க முடியவில்லையோ, தன்னைப் பின்பற்றுவோர்கள் தனது வார்த்தையை எப்பொழுது மதிக்கவில்லையோ, அப்பொழுதே, பண்டிதர் சுயமரியாதையுள்ளவராயிருந்தால், தலைமைப்பதவியிலிருந்து விலகியிருப்பார். இதுதான் சுயமரியாதைக்குலக்ஷணம்" என்று 'குடி அரசு' 'சபர்மதி ராஜியின் முடிவு' என்கிற தலையங்கத்தில் எழுதியிருந்தது. அதுபோலவே பண்டிதர் சுயமரியாதையைக்காட்டுவதற்கே ஓய்வெடுத்துக் கொண்டாரென்றால் ரொம்பவும் சரியென்றே சொல்லலாம். ஆனால் நமது தமிழ்நாட்டுப் பிராமணர்களுக்கோ "மச்சான் இறந்தால் நல்லதாச்சு, அவருடைய கம்பளி நமக்காச்சு" என்கிற முறைப்படி பண்டிதநேரு விலகினதைப்பற்றி கவலையில்லை. அவர் தலைமைஸ்தானம் இவருக்குப் பட்டாபிஷேகமாய்விட்டதே, அதுவே போதும் என்கிற சந்தோஷத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பிராமணர்களோ, அதிலும் அய்யங்கார் கூட்டத்தை நம்பினவர்கள் இதுவரை யார் உருப்படியாகியிருக்கிறார்கள்? ஆனாலும் ஓய்வு கிடைப்பது மாத்திரம் நிச்சயம். ஸ்ரீமான்களையன் ரெங்கசாமி ஐயங்காரை நம்பி ஸ்ரீமான் தாஸ் ஓய்வெடுத்துக்கொண்டார்; ராஜகோபாலாச்சாரியாரை நம்பி மகாத்மா ஓய்வெடுத்துக்கொண்டார்; சீனிவாசய்யங்காரை நம்பி பண்டிதர் ஓய்வெடுத்துக்கொண்டார். அம்மூவர் சக்தியும் இம்மூவருக்குள்ளாகவே 'ஆவாகனமாகியிருக்கிறது' இனி தமிழ் நாட்டிற்கு ஒன்றும் குறைவில்லை. எடுத்த காரியம் யாவிலும் வெற்றி. யாருக்கு? பிராமணர்களுக்கு. இந்திய அரசியல் வாழ்வென்பது பிராமணர் வாழ்வுக்கேற்பட்டதென்று நாம் பலமுறை சொல்லி வந்திருக்கிறோம்; சொல்லியும் வருகிறோம்; இனியும் சொல்லுவோம். அநுபவசாலிகளான நமது முன்னோர் பலரும் சொல்லியிருக்கிறார்கள். இதை நம்மில் பலரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் என்ன செய்வது? பிராமணர்களின் செல்வாக்குப் பெருக்கும், அதிகாரப் பெருக்கும், செல்வப் பெருக்கும் பிராமணரல்லாதாரில் இதை அறிந்த பலரையும் 'சூரிய சந்திரர்களை கிரகணம் தீண்டி' மறைப்பதைப்போல மறைத்து விடுகிறது. என் செய்வது? ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட காலத்தில் அந்த கட்சியார் இதைச் சொன்னபோது பிராமணரல்லாதாரின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டு பிராமணர்களுக்கு முன்னணியிலிருந்து ஆகை ஒடுக்கி வீரகண்டாமணி அணிந்த நமது டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு வி. கலியாணசுந்தர முதலியார் ஆகியோர் கதி இன்று எப்படி இருக்கிறது? டாக்டர் நாயுடு அஞ்ஞாதவாசம் செய்கிறார்; என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறார்; இனி என்ன பெயர் வைத்துக்கொண்டு மறுபடியும் வெளியாகலாமென்று பதைக்கிறார்; அப்போதே அவரை பிராமணர்கள் கைவிட்டுவிட்டார்கள். சென்னை சட்டசபைக்கு சேலம் ஜில்லா அபேக்ஷகர்களை நிறுத்த சேலத்திற்கு வந்த சீனிவாசய்யங்கார் நமது டாக்டர் நாயுடுவுக்கு தெரிவிக்கவில்லை; அவர் வீட்டுக்கு வரவுமில்லை; அவரைக் கலந்து பேசவுமில்லை என்றால் டாக்டர் நாயுடுவைப் பற்றி இந்த பிராமணர்கள் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பது புலனாகும். இந்த பிராமணர்களுடன் அவர் திரியும்போது, மகாத்மா வந்தாலும் டாக்டர் வீட்டில்தான் இறங்குவது, தேசபந்து தாஸ் வந்தாலும் டாக்டர் வீட்டில்தான் இறங்குவது இன்னும் யார் வந்தாலும் டாக்டர் வீட்டில்தான் இறங்குவது. இப்போது இந்த பிராமணர்களுக்கு அவருடைய வீடு 'அதிகார வர்க்கத்தார்" வீடாய்விட்டது. டாக்டர் நாயுடு அவர்கள் செய்த குற்றம்தான் என்ன? இங்கொரு கால், அங்கொரு கால் வைத்திருப்பதுதான். அதாவது சுயராஜ்யக் கட்சியை இரவு பகலாய் ஆதரித்தாலும், ஜஸ்டிஸ் கட்சியை பிராமணர்களின் ஆசைதீர திட்டினாலும், தேவஸ்தான சட்டத்தை ஆதரிக்கவும், குருகுலப் புரட்டுகளை வெளியாக்கவும் உதவியாயிருந்ததுதான் பெரிய குற்றம்.

சரி, நமது ஸ்ரீமான் திரு வி. கலியாணசுந்தர முதலியார் கதியோ, இந்த பிராமணர்கள் பின்சென்றால்தான் அவர் பெயர் பத்திரிகையில் போடப்படும். அதுவும் அவர் ஜஸ்டிஸ் கட்சியை நன்றாய் திட்டவேண்டும்; திட்டினதில் ஒன்று சொல்லியிருந்தால், கூட இரண்டு சேர்த்துதான் பிராமணப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்; அதற்கும் சம்மதித்தால்தான் கூடக் கூட்டிக்கொண்டு போகமுடியும்; இல்லாவிட்டால் அதுவும் இல்லை; டாக்டர் நாயுடுபோல் மூலையில் உட்காரவேண்டியதுதான்.

"அரை அந்தணர்," "முழு அந்தணர்" என்று சொல்லப்படும் பிராமண பக்தர்கள் பிராமண விஸ்வாசிகளான இவர்கள் சங்கதியே இப்படி இருக்குமானால் "பிராமணத் துவேஷி" யான ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரை இன்னும் உலகத்தில் வைத்திருப்பதே நமது பிராமணர்களின் தர்ம சிந்தையல்லவா? மற்றவர்களைப் பற்றியும் கேட்கவேண்டுமோ? தமிழ் நாட்டில் பிராமணரல்லாதார் ராஜீய வாழ்வினால் பிழைக்க வேண்டுமென்றாலும் சரி, தேசபக்தர்களாக வேண்டுமென்றாலும் சரி, பிராமணர்களிடம் லைசென்ஸ் பெறாமல் முடியாது என்கிற நிலைமையிலிருக்கிறது. ஆதலால் ஸ்ரீமான்கள் நாயுடு, முதலியார், இவர்களின் நிலைமையை அறிந்தவர்கள் சில "குட்டி தேசபக்தர்கள்" "வயிற்றுச்சோத்து தேசபக்தர்கள்" பிராமணரல்லாதாரை திட்டுவதைப்பற்றியும் பத்திரிகைகளில் தாறுமாறாய் எழுதுவதைப் பற்றியும் கேட்கவும் வேண்டுமா? அதைப்பற்றி பேசவும் வேண்டுமா?

ஆதி திராவிடரும் சுயராஜ்யக் கக்ஷியும்.

"சுதேசமித்திரன்" என்னும் பிராமணப் பத்திரிகை ஆதி திராவிடர்களுக்கு ஜஸ்டிஸ் கட்சியார் ஒன்றும் செய்யவில்லை என்றும், தங்கள் கூட்டத்தார் ஆதி திராவிடர்களுக்கு சுவர்க்க வாசலைத் திறந்துவிட்டுப்போவதாகவும், இனியாவது தங்களை வந்து சரணமடையும்படி உபதேசிக்கிறது. ஜஸ்டிஸ் கட்சியார் ஆதி திராவிடர்களுக்கு நன்மை செய்தார்களோ, இல்லையோ? அதைப்பற்றி அதிக கவலை வேண்டாம். அது ஆதி திராவிடர்களுக்கே தெரியும். ஆனால் காங்கிரசின் ஆதிக்கத்தை அடைந்த சுயராஜ்யக் கட்சியார் ஆதி திராவிடர்களுக்கு என்ன நன்மை செய்தார்கள்? என்ன பதவி கொடுத்தார்கள்? என்ன உத்தியோகம் தந்தார்கள்! இந்தியா சட்டசபைக்கு ஒரு ஆதி திராவிடரை நிறுத்தினார்களா? நிறுத்த ஆளில்லாமல் திண்டாடும் சென்னை சட்டசபைக்கு ஒரு ஆதி திராவிடரையாவது நிறுத்தினார்களா? சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலுக்கு ஆதி திராவிட வகுப்பில் பிறந்த ஒருவரையாவது நிறுத்தினார்களா? வேறு வகையில் இவர்கள் மட்டிலும் என்ன சாதித்து விட்டார்கள்! ஒரு சமயம் ஆதி திராவிடர்களில் எவராவது ஒருவருக்கு அதுவும் தன்னோடு கூடத் தன்னைத் தலைவர் என்று சொல்லித் திரிய,— அதுவும் வீட்டில் பட்டினி, சுத்தமாய் செலவுக்கில்லை என்று கேட்கும்போதும்,— நீ கொடுக்கிறாயா ஜஸ்டிஸ் கட்சியில் சேரட்டுமா என்று மிரட்டும்போதும்—ஒன்றோ இரண்டோ ரூபாய்கள் பிச்சை போடுவதுபோல் கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறதைத்தவிர வேறென்ன செய்திருக்கிறார்கள்? அல்லது ஆதி திராவிடர்களுக்கு வகுப்புவாரி

கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர் பதவி.

—:o:—

ஒரு நிருபர் எழுதுகிறார்:—

கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர் பதவிக்கு அடுத்த முறையாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதிருக்கிறது. இது காலை கோவை ஜில்லா போர்டு தலைவராகயிருந்து வந்த திரு. ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களின் நிர்வாக காலம் இம்மாதம் 16-தேதியோடு முடிவுற்றது. கோயமுத்தூர் தாலூகாபோர்டு தலைவர் திரு. பழனிசாமிக் கவுண்டர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தலுக்கு தான் ஒரு அபேக்ஷகராய் நிற்கிறார். ஜில்லா போர்டு அங்கத்தினர்கள் தங்கள் தலைவரைத் தெரிந்தெடுப்பதில் தத்தமக்குள் ஏற்பட்டுள்ள நேரான அபிப்பிராய பேதங்களைப் பாராட்டாது தங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள மேலான உரிமையை உபயோகிப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது. இது ஒரு பொறுப்பு மிகுந்த ஸ்தானமாகும்; இந்ஸ்தானத்திற்கு வருபவர் தேர்ச்சி பெற்ற நிர்வாகத்திறனும், அனுபவமும், விஷயங்களை அதி சாமார்த்தியத்துடன் எடுத்தாளும் யூகமும், இவையனைத்தையும்விட எல்லோரையும் அனுசரித்து நடக்கும் ஆற்றலும் படைத்தோரா யிருத்தல் வேண்டும். அவர் பொது மக்களின் உறுதியான நம்பிக்கையைப் பெற்றோராயும், மற்ற சகோதர அங்கத்தினர் களுடன் அன்புடன் கலந்து அவர்களை இழுத்துச் செல்வோராயுமிருத்தல் வேண்டும். அத்தகைய இயல்புடையார் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று நான் உறுதியாய் நம்புகிறேன். தற்சமயமிருந்த தலைவர் திரு முதலியாரைப்பற்றி சிறிது கூறவேண்டியதிருக்கிறது; இவரது நிர்வாக காலத்தில் விஷயங்கள் வெகு அமைதியாய் ஒழுங்குடன் நடந்துவந்தன. சொந்த அபிப்பிராய வேறுபாட்டின் காரணமாகவாவது விரோத வேறுபாட்டின் காரணமாகவாவது, கட்சி வேறுபாட்டின் பிளவின் மேலாவது விஷயங்கள் நடைபெற வியலாமல் முட்டுக்கட்டையாதல் திருப்தியற்ற விஷயமாதல் நிகழ்ந்தது கிடையாது. இவர் வியவகார, நிர்வாக நிபுணத்வமும் சாதுர்யமும் படைத்தவர். அங்கத்தினர்கள் மிகுந்த புத்தி சாதுர்யத்துடன் நடந்துகொள்வார்களென்று நம்புகிறேன். நான் கூறுவதைவிட, ஜில்லா போர்டின் விஷயங்களையும் நிலைமையைத் தெரிந்து நடக்கவேண்டிய விஷயங்களையும் அங்கத்தினர்கள் நன்கு அறிந்தவர்களாவார்கள். முடிவாக, சாமர்த்திய தந்திர நிபுணத்வமும், நிர்வாகத்திறனும் அனுபவ உயர்வும் படைத்த ஒருவரை அப்பொறுப்பு மிகுந்த ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுப்பார்களென்றே நம்புகிறேன்.

"மகாஜன நேசன்"

உரிமை வாங்கித்தர சம்மதிக்கிறார்களா? வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்று சொன்னாலே, சொல்பவனை, "ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிட்டான், பாவி, துரோகி" என்று சொல்லுகிறார்கள். இவர்களை நம்பி என்ன பலனை அடையமுடியும்? காஞ்சிவரத்தில் கூடிய பிராமணரல்லாதார்களாவது எல்லோரும் ஒன்றாய்ச் சேர்ந்து ஏக மனதாய் ஆதிதிராவிடர்களுக்கு, அவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்த அளவுக்கு மேலாகக்கூட சட்டசபை, கார்ப்பரேஷன், உத்தியோகம், பதவி ஆகிய எல்லாவற்றிலும் பிரதிநிதித்துவம் கொடுப்பதாய்த் தீர்மானித்தார்களே; அதை கெடுத்தவர்கள் யார்? சுயராஜ்யக் கட்சியின் "மாபெருந் தலைவரான" ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும், "காந்தி சிஷ்யரும், ஒப்பற்ற தலைவருமான" ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியாரும் கூடி, சதியாலோசனை செய்து, ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரையும் கெடுத்து, இத்தீர்மானம் காங்கிரஸ் மகாநாட்டிற்கே கொண்டுவரக்கூடாதுஎன்று தடுத்து விட்டார்கள். தீர்மானம் கொண்டுவரக்கூட சம்மதிக்காத காங்கிரஸ் தலைவரும், சுயராஜ்யக் கட்சி தலைவரும் தீர்மானத்தை நிறைவேற்ற சம்மதிப்பார்களா? என்பது ஆதிதிராவிடர்களுக்குத் தெரியமுடியாமல் போகாது. ஜஸ்டிஸ் கட்சியாராவது ஆதி திராவிடர்கள் கேட்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் சரியானதென்றும், அதற்காக தாங்கள் போராடியும், அதை தங்கள் கட்சியின் முக்கிய கொள்கையாகவும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கூச்சல் போட்டதன் பலனாய்த்தான் ஸ்ரீமான்கள் எம். சி. ராஜா, வீரய்யன் முதலிய மணிகள் ஆதிதிராவிட வகுப்பில் இருக்கிறார்கள் என்பது பிறத்தியாருக்குத் தெரியும்படியாய் இருக்கிறது. அது இல்லாவிட்டால் இவர்களுக்கு சட்டசபை எது? கான்பரன்ஸ் எது? தீர்மானம் எது? 'எங்கள் கட்சியில் வந்து சேருங்கள், நாங்கள் சாதித்துவிடுகிறோம்' என்று பிராமணர்கள் கூப்பிடுவது எது? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பணம் ஒன்றிரண்டு ரூபாய்கூட ஆதிதிராவிடர்களுக்காவது கிடைப்பதேது?

நிருப நேயர்களுக்கு விண்ணப்பம்.

"குடி அரசு" பத்திரிகை மிகவும் குறைந்த அளவுள்ளது. அதில் 10 பக்கங்கள் விஷயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும் பல வர்த்தமானங்களும் நிருபங்களும் வந்து குவிந்து பத்திரிகை ஏற்படுத்தியதின் கருத்தை நிறைவேற்றமுடியாமல் கஷ்டப்படுத்துகிறது. நிருபர்களும் வர்த்தமானம் தெரிவிப்பவர்களும் நமது பத்திரிகையை தினசரி என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஆதலால் நாம் உடனுக்குடன் பிரசுரிக்கவில்லை என்று நிருப நேயர்கள் நம்மீது வருத்தப்படாமல் இருக்கும்படி வேண்டுகிறோம். பல தேச வர்த்தமானங்களை நாம் பிரசுரிப்பதில்லையென்றுகூட நம்மீதுபல சந்தாதாரர்களுக்கு சலிப்பிருப்பதாய் தெரிகிறது. அவர்களும் நமது கருத்தையும் நிலையையும் அறிந்து மன்னிப்பார்கள் என்றே நம்புகிறோம். நமது பத்திரிகை வர்த்தமானப் பத்திரிகை அல்லவென்றும், பிரசாரப் பத்திரிகை என்றும் மறுபடியும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆதலால் நிருபங்களாலும் வர்த்தமானங்களாலும் நமது பத்திரிகையின் உத்தேசத்தைக் கெடுக்காமலும் வர்த்தமானம் இல்லையே என்று கருதி அலக்ஷியம் செய்யாமலும் இருக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

பத்திராதிபர்.

மௌலானா முகமதலியின் மதபக்தி.

—0—

மௌலானா முகம்மதலி ஒரு கூட்டத்தில் பேசும் போது இஸ்லாத்தை அழிக்க விரும்புவோரின் கையிலிருந்து அதைக் காப்பாற்ற வேண்டுமென்றும் இதுசமயம் இஸ்லாத்துக்கு ஆபத்து வந்திருக்கிறதென்றும் சொல்லி வருகையில் "நாம் இந்துக்களுடன் நேசபாவமாயிருக்கத் தயார். ஆனால் நம்மோடு சண்டை போட இந்துக்கள் விரும்புமபக்ஷத்தில் இந்தியாவிலுள்ள 7 கோடி முஸ்லிம்களும் 21 கோடி இந்துக்களைப் பணிய வைக்க முடியும். நமது நபிகள் நாயகம் காலத்தில் 15-பேர் சேர்ந்து ஒரு சைனியத்தை ஜெயித்து விட்டார்கள். ஆகையால் 7-கோடி மகம்மதியர்கள் 21 கோடி இந்துக்களை ஜெயிப்பது கஷ்டமல்ல" என்று சொன்னாராம்.

இதை 'சுதேசமித்திரன்' இந்துக்களுக்கு மகம்மதியர்கள் பேரில் துவேஷம் உண்டாகும்படி 'மௌலானா முகமதலியின் முழக்கம்' என்கிற தலைப்பின் கீழ் இதை எழுதியிருக்கிறது. மௌலானா பேசியவைகளில் நமக்கொன்றும் ஆச்சரியமில்லை. மௌலானா பேசியவைகளில் நமக்கொன்றும் ஆச்சரியமில்லை மௌலானா கணக்கில் தவறி விட்டார் என்று எண்ணுகிறோம். 2 கோடி இந்துக்களை அடக்க 7 கோடி முஸ்லீம்கள் தேவையில்லை. இதே 21 கோடி இந்துக்கள் என்போர்களை முக்கால் கோடிக்கும் குறைவான பிராமணர்கள் ஆயிரக்கணக்கான, வருஷங்களாய் தலையெடுக்க வொட்டாமல் பணிய வைத்திருக்க வில்லையா? விபசாரத் தரகில் ஜீவிக்கும் பிராமணனைக் கூட ஜமீன்தாரரான பிராமணரல்லாத இந்து தூதுக் கடிதம் வாங்கும் போதும் "சுவாமி" என்று கூப்பிடவும், தலைவணங்கி கும்பிடவும் அவன் ஆசீர்வாதம் சொல்லி கடிதம் கொடுக்கவும் தானே நடந்து வருகிறது. ஒரு சமூகம் எவ்வளவு பெரிய எண்ணிக்கை உள்ளதானாலும் தங்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் இல்லாமல் ஒருவரை ஒருவர் தீண்டாதவராய், பார்க்க கூடாதவராய் மதித்துக் கொண்டு மக்களைப் பிரித்து வைத்து ஒருவர் உழைப்பில் ஒருவர் பிழைக்க நினைத்துக் கொண்டு இருப்பவர்களை உள்ளே வைத்திருக்கும் வரையில் மிகச் சிலரால் பணிய வைத்து விடலாம். இதற்கனுகூலமாக நமது நாட்டில் "பிராமணீயம்" இருக்கும் வரை நம்மை யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் சுலபமாய் பணிய வைக்க முடியும். ஆதலால் மௌலானா சொல்வதில் கணக்குத் தவறு இருக்கிறதே தவிர அதிசயம் ஒன்றும் இல்லை. அவரும் நாம் மகம்மதியர்களோடு சண்டை போட நினைத்தால்தான் தன்னால் இந்துக்களை பணிய வைக்க முடியும் என்கிறாரே தவிர மற்றபடி பிராமணர்களை தங்களுக்கு அன்னமளிப்பவர்களை பணிய வைத்திருப்பதைப் போல் அல்ல. ஆதலால் மௌலானா சொன்னதில் யாரும் குற்றங்கருதமாட்டார்கள் என்றே நினைக்கிறோம்.

ஹிந்து சமய மாண்பு.

குருட்டு நம்பிக்கை வேண்டாம்.

மகாத்மா காந்தி எழுதுகிறார்:—

சனாதன ஹிந்து ஒருவர் மகாத்மா காந்திக்கு எழுதிய நிருபமொன்றில் ஹிந்து மதத்தில் தற்காலமுள்ள முரண்களைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, 'தீண்டாதவர்' களை மற்ற ஹிந்துக்கள் தங்களுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் அவர்களிடம் முதலில், மாட்டிறைச்சியையும், செத்த மிருகங்களினிறைச்சியையும் தின்பதில்லையென்று உறுதிமொழி வாங்கிக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். அதன்மீது மகாத்மாகாந்தி "எங் இந்தியா" வில் எழுதியுள்ள கட்டுரையின் சாராம்சம் பின் வருமாறு:—

ஹிந்துமதம் என்பது ஓர் உயிருள்ள தத்துவம். அது இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டது. அதற்கு வளர்ச்சியும், தேய்வும் உண்டு. அதனுடைய வேர் ஒன்றேயாயினும் அதன் கிளைகள் அனந்தம். வேனில், வசந்தம் முதலிய பருவ மாறுதல்களினால் அது பாதிக்கப்படுகிறது. ஒரு வகையில் அது சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டது. மற்றொரு வகையில் சாஸ்திரங்களைக் கடந்து நிற்பது. ஒரு தனி நூல் அதற்கு ஆதாரமில்லை. ஹிந்துக்கள் அனைவரும் கீதையைப் போற்றுகிறார்கள். ஆனால் கீதையும் வழிதான்காண்பிக்கிறது. பழக்கத்தை மாற்றுவதற்குக் கீதையினாலும் முடிவதில்லை. ஹிந்து சமயம் கங்கையாற்றிற்கொப்பானது. உற்பத்திஸ்தானத்தில் கங்கை தூயதாய் நிர்மலமாய் விளங்குகிறது. வழி நெடுக அதில் அழுக்குகள் வந்து அடைகின்றன. இவ்வாறே இந்து மதமும் பிறவியில் தூயதாயினும் வழியில் பல அழுக்குகளை ஏற்றிவந்திருக்கிறது. எனினும் கங்கையைப்போலவே இந்து மதமும் மொத்தத்தில் நன்மை தந்து விளங்குகிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு வடிவம் அதற்குண்டு. ஆயினும் உட்கருத்து எங்கும் ஒன்றே. பழக்க வழக்கங்கள் மாறுதல்கட்குட் பட்டவை. ஆனால் உண்மைச் சமயம் மாறுவதில்லை.

இந்து மதத்தின் தூய்மை இந்துக்களின் தன்னடக்கத்தைப் பொறுத்தது. மதத்துக்கு ஆபத்து நேர்ந்தபொழுது இந்துக்கள் கடும் பிராயசித்தங்கள் செய்து கொண்டு அதை ஆபத்தினின்றும் மீட்டிருக்கிறார்கள். சாஸ்திரங்கள் வளர்ச்சியுடையவை. வேதங்கள் உபநிஷதங்கள் ஸ்மிருதிகள் புராணங்கள் இதிகாசங்கள் இவை எல்லாம் ஒரே நாளில் ஏற்பட்டவையல்ல.

அந்தந்தக் கால நிலையையும் அவ்வப்போதைய அவசியங்களையும் ஒட்டி அவை எழுந்தன. ஆதலினால் தான் அவை ஒன்றோடொன்று முரண்படுவதாகக் காணப்படுகின்றன. நித்தியமான உண்மைகளைப் புதிய முறையில் இவை எடுத்துக் கூறுவனவல்ல. அந்தந்த நூல் எழுந்த காலத்தில் அவ்வுண்மைகள் எவ்வாறு அனுஷ்டானத்தில் இருந்தன என்பதையே விளக்குகின்றன. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் நல்லதென்று கொள்ளப்பட்ட ஒரு வழக்கத்தை மற்றொரு காலத்தில் குருட்டுத் தனமாகப் பின்பற்றி நடத்தல் கூடாது. ஒரு காலத்தில் யாகங்களில் உயிர்ப்பலி அளிக்கப்பட்டதென்ற காரணத்தினால் இப்போது மீண்டும் அவ்வழக்கத்தைக் கொள்ளப் போகிறோமா? ஏதோ ஒரு காலத்தில் நமது மூதாதையர் மாட்டிறைச்சி தின்கின்றனர். இப்போது நாமும் மாட்டிறைச்சி தின்னவேண்டுமா? இந்நாட்டில் ஒரு காலத்தில் திருடர்களைக் கால்களையும் கைகளையும் வெட்டிப் போட்டு வந்தனர். அந்த அநாகரிகக் கொடுமையை நாம் இன்று மேற்கொள்ள வேண்டுமா? ஒரு பெண் பல புருஷர்களை ஒரே காலத்தில் மணம்புரியும் வழக்கம் அக்காலத்திலே நிலவியிருந்திருப்பின் அதற்காக அதை இப்போது நாம் கைக்கொள்வோமா? முன்னைய வழக்கமென்று குழந்தை மணங்களை நாம் ஆதரித்து நிற்கப் போகிறோமா? மனித வர்க்கத்தின் ஒரு பகுதியாரை நாம் ஒரு காலத்தில் புறக்கணித்திருந்ததால், இன்று அவர்களுடைய வழித்தோன்றியவர்களைச் சாதி பிரஷ்டர்களாகப் பாவித்தல் நீதியா?

ஹிந்துமதம் தேக்கநிலையை வெறுத்துத் தள்ளுகிறது. அறிவுக்கு எல்லையில்லை. சத்தியம் அனந்தமானது. ஆன்ம சக்தியைப் பற்றி நாம் புதிய புதிய உண்மைகளைக்கண்டு வருகிறோம். இனியும் கண்டு வருவோம். புதிய அநுபவங்கள் நமக்குப் புதிய கடமைகளை அறிவுறுத்தலாம். ஆனால் சத்தியம் என்றும் ஒரு நிலையதாகவேயிருக்கும். சத்தியத்தை முழுதும் உணர்ந்தேனென்று கூறவல்லார் யார்? வேதங்கள் சத்தியப் பொருளை உணர்த்துகின்றன. ஆனால் வேதங்களை முற்றுமறிந்தவர் எவர்? இன்று வேதங்கள் என்று வழங்குபவை உண்மை வேதமாம் ஞானப் பெருநூலின் கோடியிலொரு பகுதிகூட இல்லை. நம்மிடையுள்ள இச்சில புத்தகங்களுக்கேனும் முழுதும் பொருளறிந்தவர் யார்? இதன் இயலாமையை யறிந்தே நமது மகரிஷிகள் "பிண்டத்திலுள்ளதே அண்டத்திலும்". என்று கற்பித்தார்கள். ஆன்மாவை ஆராய்ச்சி செய்வது போல் ஜகத்தை ஆராய்ச்சி செய்ய முடியுமோ? ஆன்மாவை அறிந்தவர்கள் ஜகத்தை அறிந்தவர்கள் ஆவார்கள். ஆன்மாவை அறிதற்கு இடைவிடா முயற்சி வேண்டும். அம்முயற்சி தூயதாயிருக்கவேண்டும். தூய இருதயமின்றித் தூய முயற்சி கைகூடாது. இருதயம் தூயதாவதற்கு நியமசாதனங்களை அப்பியசிக்கவேண்டும். இறைவன் அருளின்றி இச்சாதனங்களை அப்பியசிக்க முடியாது. இறைவன் அருள் பெறுதற்கு பக்தி வேண்டும். ஆகையினால் தான் துளசிதாசர் ஸ்ரீ ராமநாமத்தின் மகிமையைப் பற்றிப் பாடியுள்ளார். ஆகையினால் தான் பாகவத புராணமும் 'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்னும் துவாதச மந்திரத்தின் பெருமையை உபதேசிக்கிறது. இம் மந்திரத்தை இருதயத்தினின்றும் உச்சரிக்க வல்லான் எவனோ அவனே உண்மையான சனாதன ஹிந்து என்பது என் கருத்து.

மாட்டிறைச்சி தின்போரைப் பகிஷ்கரித்தல் பண்டைக்காலத்தில் அவசியமான முறையாயிருந்திருக்கலாம். ஆனால் இன்று அது தகுதியற்றது; இயலாதது. "தீண்டாதார்" மாட்டிறைச்சி தின்பதை விட வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அன்பினாலும் அவர்களுடைய அறிவைத் தூண்டுவதனாலும் அது முடியும். ஹிம்சை நெறிபற்றி இத்தகைய முயற்சிகள் நடைபெற்றே வருகின்றன. ஆனால் ஹிந்து மதம் உணவில் அடங்கியிருப்பதாக கருதல் கூடாது. நல்லொழுக்கம் சத்தியம் அஹிம்சை இவைகளே ஹிந்துமதத்தின் உயிர். சத்தியத்தைக் கடைபிடித்து அருளொழுக்கத்தை மேற்கொண்டு இறைவனுக்குப் பயந்து வாழ்க்கை நடத்துவோர் ஊனுணவு தின்போராயினும் சுத்தசைவ உணவே கொள்ளும் வேஷதாரி ஒருவனைவிடச் சிறந்த ஹிந்து ஆவார். ஆனால் எவன் புலால் உணவில் உள்ள ஜீவ ஹிம்சையை உணர்ந்து அதைத்தள்ளி மனிதனையும் மிருகத்தையும் பறவையையும் ஒருங்கே நேசித்து வாழ்கிறானோ அவன் போற்றுதற்குரியவன்; அவன் கடவுள் அறிவு பெற்றவன்; கடவுளைக் கண்டவன்; அவனே உத்தம பக்தன்; அவனே மன்பதையின் பரமகுரு.

ஹிந்து மதமும், பிறசமயங்களும் தராசில் வைத்து நிறுக்கப்படுகின்றன. நித்தியமான உண்மை ஒன்று, ஆண்டவனும் ஒருவரே. முரண்பாடுள்ள கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் விட்டு உண்மை நெறியாம் நேர்வழியில் நடப்போமாக. அப்போது தான் நாம் உண்மை ஹிந்துக்களாவோம். இறைவன் அடியிணைகளை நம்பி அவனுடைய திருவுளத்தின் திறனறிந்து நடப்போர் அவன் அருள் பெறுவர். வாயினால் மட்டும் "ராம ராம" என்று உருப்போடுவதினால் இறைவன் திருவருட் பேறு பெறுதலில்லை.

"திராவிடன்."

விவேகாநந்த வாசகசாலை ஆண்டுவிழா.

கொப்பனாபட்டி.

இவ்வூர் விவேகானந்த வாசகசாலையின் நான்காம் ஆண்டு நிறைவு விழா நாளது வைகாசி-மீ 22-உ. (4-6-26) வெள்ளிக்கிழமை மாலை இரண்டு மணி முதல் மகிபாலன் பட்டி திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையின் கீழ் காரைக்குடி "குமரன்" உதவி ஆசிரியர் திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியாரவர்கள், திருக்கோவலூர் ஞானியார் மாணவர் கழகம் திரு. ம. ரா. குமாரசாமிப் பிள்ளை அவர்கள், மேலைச்சிவபுரி சன்மார்க்கசபைத் தலைமை ஆசிரியர் திரு. ஆ. பூவராகம் பிள்ளை அவர்கள், அமராபதி புதூர், திரு. பி. ச. சுப்பிரமணியச் செட்டியாரவர்கள் முதலியோர் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள்.

பழ. அ. மெய்யப்பன், காரியதரிசி.

"விகடதூதன்" பத்திராதிபர்.

இன்று விகட தூதன் பத்திராதிபர் ஸ்ரீமான் K. P. மாணிக்கநாடார் அவர்கள் சுற்றுப்பிரயாணம் புறப்பட்டு விட்டார். கனவான்கள் வரவேற்று சந்தாதாரராகச் சேர்ந்தும், சந்தாவும், சன்மானங்களும் தந்து, விகடனை மென்மேலும் விர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று உப பத்திராதிபர் தெரிவித்துக் கொள்ளுகிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஷூ வைகாசி-மீ 10 உ

பப்ளிக் சர்வீஸ் கமிஷன்.

சர்க்கார் ஊழிய சம்மந்தமான விசாரணைச் சபை.

இந்தியாவில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தமான விஷயத்தைப்பற்றி விசாரித்து அறிந்து தக்கபடி செய்வது என்ற பெயரை வைத்துக்கொண்டு அதற்காக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்று ஒரு கமிட்டியை அரசாங்கத்தார் நியமித்து இருக்கிறார்கள். அக்கமிட்டிக்கு இந்தியர்களின் சார்பாய்—இந்துக்களின் சார்பாய் நியமிக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர் ஒரு தமிழ்நாட்டு பிராமணர். இந்தியாவிலிருக்கும் 33 கோடி ஜனங்களில் முக்கால் கோடி ஜனங்கள் கொண்ட வகுப்பார்களான ஒரு சிறு சமூகமான பிராமண கோஷ்டியில் இருந்து ஒருவரைப் பொருக்கி எடுத்திருக்கிறார்கள். இவர் இந்தியாவிலுள்ள மனிதவர்க்கத்திற்கே உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்ளும் ஜாதியைச் சேர்ந்தவர். அதிலும் ஐயங்கார் ஜாதியைச் சேர்ந்தவர்.

இந்தியர்களின் சர்க்கார் உத்தியோக சம்பந்தமான விஷயங்கள் இப்போது இவர் கையில்தான் அடங்கியிருக்கிறது. இனி இந்தியர்களின் தலையெழுத்தையும் ஜாதகத்தையும் கணிப்பவர் இந்த பிராமணர்தான். சர்க்காரும் எந்த ஆசாமியைப் பிடித்தால் தங்கள் சொல்படி ஆடுவாரோ, தாங்கள் எழுதிவைத்ததில் கையெழுத்துப் போடுவாரோ, அந்த ஆசாமிகளைப் பார்த்துதான் நியமிப்பார்கள். இந்தப் பிராமணரே இதே சர்க்கார் உத்தியோகத்தில் 250 ரூபாய் சம்பளத்திலிருந்து சர்க்காரின் தாளத்திற்கு தகுந்தபடி ஆடி சர்க்காரின் நம்பிக்கைபெற்று சர். பட்டம் பெற்று இப்போது 3500 ரூபாய் சம்பளத்துடன் இந்த பொறுப்புள்ள உத்தியோகத்திற்கு வந்திருக்கிறார். சர்க்காரும் பொறுப்புள்ள உத்தியோகங்கள் எதானாலும் இந்தியர்களுக்குக் கொடுப்பதாயிருந்தால் அவைகளை பிராமணர்களுக்கேதான் கொடுத்து வருகிறார்கள். சர்க்காருக்கு எப்பொழுதும் பிராமணரல்லாதாரிடம் நம்பிக்கையே கிடையாது. சர்க்கார் இந்தியர்கள் தலையில் கைவைக்க உத்தேசித்து ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டுமென்றால் அவைகளுக்கு பிராமணர்களைத்தான் நம்புவார்கள். உதாரணமாக மக்களை மிருகங்களிலும் கேவலமாய் அடக்கி ஆள்வதற்கென்று ரௌலட் ஆக்ட்டு ஏற்படுத்த நியமித்த ரௌலட் கமிட்டிக்கு இந்தியர்கள் சார்பாய் ஒரு பிராமணரைத்தான் நியமித்தார்கள். (மகாகனம் சாஸ்திரியார்.)

இந்தியர்களுக்கு அவர்களின் ஜீவனத்திற்கு மாதம் என்ன செலவு பிடிக்கும் என்று தெரிந்துகொள்வதற்கு ஐயங்கார் பிராமணர் அபிப்பிராயத்தைத்தான் கேட்டுக்கொண்டார்கள். அதாவது 'இந்து' பத்திரிகையின் ஆசிரியராயிருந்த ஸ்ரீமான் கஸ்தூரி ரெங்கய்யங்காரின் குமாரரும் இப்போது 'இந்துப்' பத்திரிகைக்கு ஆசிரியராயிருக்கும் ஸ்ரீமான் எஸ். ரெங்கசாமி அய்யங்காருக்கு தகப்பனருமான ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் என்கிற ஐயங்கார்தான் யோசனை சொன்னார். என்ன யோசனை? ஒரு இந்துவின் ஜீவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2—8—0 (இரண்டரை ரூபாய்) இருந்தால் போதும் என்று சொன்னார். இன்னமும் இப்படியே நமது தலையில் கையை வைக்க நியமித்த ஒவ்வொரு கமிஷனுக்கும் பிராமணர்களைத்தான் பிடிக்கிற வழக்கம். அது மாத்திரமல்ல, ஒத்துழையாமையை ஒடுக்க சட்டமறுப்புக் கமிட்டி என்று ஒரு கமிட்டி ஏற்பட்டது. அதிலும் சென்னை மாகாணச் சார்பாய் இரண்டு ஐயங்கார். பிராமணர்கள்தான் நியமிக்கப்பட்டார்கள். மகாத்மா காந்தியை ஜெயிலுக்கு அனுப்பவேண்டுமென்கிற அவசியம் நமது சர்க்காருக்குவந்தபோது அதற்காகவும்மகாகனம் வி. சீனிவாச சாஸ்திரியார் என்கிற ஒரு பிராமணரைக் கொண்டு அபிப்பிராயம் சொல்லச்செய்து மகாத்மாவை ஜெயிலுக்கு அனுப்பினார்கள்.

இது மாத்திரமல்ல. "இந்துமத புராண காலங்களிலேயே" ஏதாவது பாட்டுக்கோ, வஞ்சகத்திற்கோ, கொடுமைக்கோ, கொலைக்கோ, ஒருவர் அவசியமிருந்தால் அதற்கும் பிராமணர்களாகவே இருந்திருப்பதாகவும் கடவுளே மனிதராய் வந்து மேற்படி காரியங்களைச் செய்யவேண்டியிருந்தாலும் பிராமண அவதாரங்களையே யெடுத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படியிருக்க இப்போது மாத்திரம் அது எப்படி பொய்த்துப் போகும். வாயில்மாத்திரம "ஒத்துழையாமை" என்பார்கள், "முட்டுக்கட்டை" என்பார்கள்,"சுயராஜ்யம்" என்பார்கள், "சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்வது" என்பார்கள், "உத்தியோகம் ஒப்புக்கொள்வதில்லை" என்பார்கள் காரியத்தில் உள்ள உத்தியோகங்களை அவர்களே அவாகன படுத்திக்கொள்வார்கள். மந்திரிகள் உத்தியோக ஆசை பிடித்தவர்கள் என்று சொல்லி ஆள்வைத்து பிரசாரம் செய்து பாமர ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். ஆனால் மந்திரிகள் சர்க்கார் தயவில் ஒரு உத்தியோகமும் பெறவேயில்லை. அவர்கள் கட்சியார் சட்டசபைக்குப் பொது ஜனங்களால் பெரும்பான்மையாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அதன் பலனாய் அவர்களுக்கு அந்தப்பதவி சீர்திருத்தச் சட்டப்படி கிடைத்தது. ஆனால் பிராமணர்களுக்கு எந்தச் சட்டப்படி கிடைத்தது? சர்க்கார் தயவென்கிற சட்டப்படி கிடைத்தது. சர்க்கார் சொன்னபடியெல்லாம்ஆடி,குடிகள் தலையில் கையை வைத்து சர்க்காருக்கு அனுகூலம் செய்து கொடுத்ததன் பலனாய் அவர்களுக்குக் கிடைத்தது. இது சமயம் உயர்ந்த உத்தியோக மெல்லாம் யாரிடமிருக்கிறது? வெள்ளைக்காரர்களுக்கு அடுத்தாப் போல் பிராமணர்களிடம்தான் இருக்கிறது. பொறுப்புள்ள உத்தியோகமெல்லாம் பெரும்பான்மையாய் அனுபவித்து வருகிறார்கள்.

நிர்வாகசபை மெம்பர் பிராமணர். ரூபாய் 5333—5—4 ரிவனியூ போர்டு மெம்பர் பிராமணர் ரூ. 3500. ஐக்கோட்டு ஜட்ஜிகள் பிராமணர்கள் ரூ. 3500.

ஜில்லா ஜட்ஜிகள் பிராமணர்கள்; சப் ஜட்ஜிகள் பிராமணர்கள்;ஜில்லா முனிசிப்கள் பிராமணர்கள்;கலெக்டர்கள் பிராமணர்கள்; டிப்டி கலெக்டர்கள் பிராமணர்கள்; அட்வகேட் ஜெனரல் பிராமணர்;அரசாங்கக்காரியதரிசிகள் பிராமணர்கள்; கைத்தொழில் இலாக்கா டைரக்டர் பிராமணர். இன்னமும் 1000, 2000, 3,000 சம்பள முள்ள எந்த இலாகாவை எடுத்துக்கொண்டாலும் பிராமணர்களே பெரும்பான்மையாய் நிறைந்து கொண்டு பனகால் ராஜா அப்படிச் செய்தார், பாத்ரோ இப்படிச்செய்தார், சிவஞானம்பிள்ளை ஒன்றும் செய்யவில்லை என்பதாகக் கூலியாள் வைத்து தூற்றிக்கொண்டு பொது ஜனங்களையும்ஏமாற்றி இவர்களை சர்க்காருக்கு காட்டிக்கொடுத்து அங்கும் உத்தியோகம் பெற்றுக்கொண்டு வாழ்கிறார்கள். இதை அறியாமல் சில பிராமணரல்லாதார் இந்த பிராமணர்கள் தின்றுகழித்த எச்சிலையை தங்களுக்குப் போடமாட்டார்களா என்று அவர்கள் பின்னால் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படியே நடந்து கொண்டிருந்தால் பிராமணரல்லாதார் கதிதான் என்னவது? இதை ஒருவரும் கவனிப்பார் இல்லையோ.

நம்மை சிலர் உத்தியோக ஆசைபிடித்தவர் என்று சொன்னாலும் சரி, ஒத்துழையாதவன் என்று சொன்னாலும் சரி, ஜஸ்டிஸ் கட்சிக்காரன் என்று சொன்னாலும் சரி இவ்விதம் ஒரு வகுப்பு நம்மைத் "தீண்டாதார்", "வேசிமக்கள்" என்று சொல்லிக் காலில் வைத்து அழுத்திக்கொண்டு அதிகாரங்களையும் பதவிகளையும் பெற்றுக்கொண்டு போக, மற்றவர்கள் கீழேபோய்க் கொண்டிருப்பதென்றால் இது பிராமணரல்லாத சமூகத்திற்கே அவமானகரமான காரியமென்றே சொல்லுவோம். அதிலும் நமது சர்க்காருக்கும் பிராமணரல்லாதார் என்றால் மிகவும் அலக்ஷியமாய் மதிக்கும்படி யாகிவிட்டது. இதற்குப் பிராமணரல்லாதாரிலேயே பிராமணர்களுடன் சுற்றித் திரியும் சில சமூகத் துரோகிகள் காரணமாயிருந்தாலும் பிராமணரல்லாதாருக்குள்ளும் சில கட்டுப்பாடுகளும் ஒற்றுமையும் தேவையிருக்கிறது. கடுகளவு தியாகபுத்தியோடு பிராமணரல்லாதார் கலந்து வேலை செய்வார்களானால் இந்த சர்காரை ஆட்டிவைக்கலாம். ஆனாலும் நமது பிராமணர்கள் அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். என்றாலும் இது முடியாத காரியமல்ல. நமது பாமர ஜனங்களுக்கு நாம் செய்யவேண்டிய பிரசாரம் ஏவ்வ...

ஒத்துழையாமை நாற்றம்

வீசும் சுயராஜ்யக்கட்சி மெம்பர்களும் கோயமுத்தூர் ஜில்லா போர்டும்.

கோயமுத்தூர் ஜில்லா போர்டின் கூட்டமொன்று பிரசிடெண்டு ராவ் சாஹிப் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. இக்கூட்டத்திற்கு 40 அங்கத்தினர் வந்திருந்தார்கள். ஏனெனில் ஸ்ரீமான் முதலியாரது நியமனம் பெற்ற பிரசிடெண்டு உத்தியோக காலத்தில் இந்த கூட்டம் கடைசி கூட்டமாகும். ஆதலால் ஸ்ரீமான் முதலியாருக்கு ஜில்லா போர்டு மெம்பர்களின் நன்றியறிதலைக் காட்டவும் வந்தனங் கூறவும் "சுயராஜ்யக் கட்சி அங்கத்தினர்கள்" உள்பட ஏறக்குறைய எல்லா மெம்பர்களுமே வந்திருந்தார்கள். அப்பொழுது இம்மாதம் 30-ல் கோயமுத்தூருக்கு விஜயம் செய்யப் போகும் கவர்னர் துரை அவர்களுக்கு ஜில்லா போர்டின் சார்பாய் ஒரு உபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் வந்துவிட்டது. அக்கூட்டத்தில் ஒத்துழையாமை நாற்றம் வீசும் சுயராஜ்யக் கட்சி மெம்பர்களான ஸ்ரீமான் ராவ் பஹதூர் டி. ஏ. இராமலிங்கச் செட்டியாரும் ஜில்லா போர்டுக்கு சர்க்காரால் நியமனம் பெற்ற மெம்பரான ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்காரும் மெம்பர்களாய் ஆஜராகி யிருந்தார்கள். உபசாரப் பத்திரத்தோடு போகாமல் உபசாரப் பத்திரத்திற்கு 350 ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று அக்கிராசனர் ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். "ஒத்துழையாமை நாற்றங்" கொண்ட ஸ்ரீமான்கள் செட்டியார் நிலைமையும் ஐயங்கார் நிலைமையும் கஷ்டமாய்ப் போய்விட்டது. தங்களது ஒத்துழையாமை நாற்றத்தை வெளியில் காட்டி அத்தீர்மானத்தை எதிர்த்தாலோ ஸ்ரீமான் செட்டியாரின் வயிற்றுக்குள் இருக்கும் ராவ் பஹதூர் பட்டத்தையும், ஐயங்கார் வயிற்றுக்குள்ளிருக்கும் ஜில்லா போர்டு நியமனத்தையும் வெளியில் கக்கவேண்டியதாயிருக்கிறது. சர்க்காரிடம் பெற்றிருக்கும் தயவுக்காக அத்தீர்மானத்தை ஆதரித்தாலோ தங்கள் மேல் வீசுவதாகச் சொல்லும் ஒத்துழையாமை நாற்றம் மறைந்து போகும்; பிறகு சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் ஓட்டுக்கிடைக்காது என்கிற பயம். என் செய்வார்கள், பாவம்! திருடனைத் தேள் கொட்டியது போல் செட்டியார் மௌனமாயிருந்தார். ஐயங்காரோ வாதத்தில் கலந்து கொண்டு 350 ரூபாய்க்குமேல் செலவு செய்யக் கூடாது, என்று உரத்துப் பேசி "ஒத்துழையாமை"யைக் காட்டிக் கொண்டார்.

தீர்மானமே 350 ரூபாய்க்கு மாத்திரம் இருக்கும்போது ஐயங்கார் 350 ரூபாய்க்கு மேல் போகக் கூடாது என்றால் என்ன அர்த்தமோ தெரியவில்லை. ஒரு வீட்டில் ஒருவன் திருடி விட்டான். அவனைப்பிடித்து மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு மேஜிஸ்ட்ரேட் 15 அடி அடிக்கும்படி தீர்ப்புச் சொன்னார். தீர்ப்புச் சொல்லும் போது கோர்ட்டில் கூட்ட மிருந்ததால் அக் கூட்டத்தார் தனது திருட்டை மறந்து சாமார்த்தியத்தை அறியும்படி, திருடினவன் மேஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து "15 அடி தான் அடிக்க வேண்டும்; அதற்கு மேல் ஒரு அடிவிழுந்ததோ,—அப்புறம் தெரியும் நம்ப சங்கதி" என்று வீர மொழி பேசினானாம். அதைப்போல் நமது ஐயங்கார் 350 ரூபாய்க்கு மேல் செலவு செய்யக்கூடாது என்று கண்டித்துப் பேசி அங்கு வந்திருந்த மெம்பர்களுக்கு தனது "ஒத்துழையாமை நாற்றத்தைக்" காட்டி விட்டார். பிறகு உபசாரப்பத்திரம் தயாரிக்க ஏற்படுத்திய கமிட்டியில் ஐயங்கார், செட்டியார் முதலியோரது பெயர் சேர்க்கப்பட்டது. ஸ்ரீமான் ஐயங்கார் ஜாடை காட்டி தமது பெயரை விலக்கி விடும்படி கேட்டுக் கொண்டாராம். செட்டியார் அதைக்கூட சொல்ல வில்லையாம். கவர்னரை சந்திக்கும் சந்தர்ப்பத்தை இழக்கச் செட்டியாருக்கு மனமில்லை; ஐயங்காருக்கோ சம்மதமில்லாமல் ஆஜராகிக் கொள்ளலாம் என்கிற தைரியம்.

ஓட்டர்களின் ஸ்வதந்தியக்காரத் தனமானது இவர்களை இவ்வளவு புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ளச் செய்கிறது. என்ன செய்வது! இந்தியாவின் சுயராஜ்யம் இப்படிப்பட்ட தேசிய வீரர்கள் (?) கையில் சிக்கிக்கிடக்கிறது. நிற்க,

இது நடந்த பிறகு பிரசிடெண்டு ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரின் பிரசிடெண்டு வேலையைப் பாராட்டி அடியில் கண்ட தீர்மானம் ஏக மனதாய் நிறைவேறியது. அதாவது "இந்த போர்டின் பிரசிடெண்டாக ராவ் சாகிப் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் 3 வருஷ காலமாய் மிகவும் போற்றும்படியாய் இந்த போர்டின் வேலைகளை சரிவர நடத்தினதற்காகவும் இந்த ஜில்லாவில் ஸ்தல ஸ்தாபன சுய ஆட்சி என்ற சுயராஜ்ய பரிபாலன விஷயத்தில் சம்பந்தப்பட்ட எல்லோரிடமும் அன்னியோன்னியமாய் ஒத்துழைத்து அபிவிருத்தியைக் காட்டியதற்காகவும், இந்த போர்டார் புகழ்வதுடன் தங்களது உண்மையான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்," என்கிற தீர்மானத்தை ஊத்துக்குளி ஜமீன்தார் குமார ராஜா அவர்கள் பிரேரேபிக்க ஏகமனதாய் நிறைவேறிற்று. ஒத்துழையாதாரோ, சுயராஜ்யக் கட்சிக்காரரோ, தவிர வேறு யாராவது ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றி நிருவாகம் நடத்தினால் ஸ்தல ஸ்தாபனங்களின்மீது இடிவிழுந்துவிடும் என்று சொல்லும் "காங்கிரஸ் விஸ்வாசிகள்" ஒத்துழையாதாரும் சுயராஜ்யக் கட்சியாரும் அல்லாத ஸ்ரீமான் ராவ் சாகிப் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் நிர்வாகம் நடத்தியும் ஸ்தல ஸ்தாபனங்களில் இடிவிழுந்து விடாமல் அபிவிருத்தி பெற்றிருக்கிறதற்கு என்ன பதில் சொல்லுவார்களோ தெரியவில்லை.

ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார்.

ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் செங்கற்பட்டு ஜில்லாவில் பிராமணர்களுக்காக பிரசாரம் செய்து வருகையில் பல்லாவரத்தில் ஒரு பிராமணர் அக்கிராசனத்தின் கீழ் பிராமணர்களின் நற்சாக்ஷிப் பத்திரமான வரவேற்புப் பத்திரம் பெற்றுக்கொண்டு தனது திருவாக்கால் "மேல் நாட்டாருக்கு வயது 42, கீழ் நாட்டாருக்கு வயது 22-; நமது நாட்டில் பஞ்சம் அதிகம்; ஆதலால் ஸ்ரீமான் ஏ. இராமசாமி முதலியாருக்கு ஓட்டுக்கொடுக்காதீர்கள். அவர் அடாத செயல்கள் செய்வதால்தான் அவருக்கு ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்று சொல்லுகிறேன். ஸ்ரீமான்கள் எம். கே. ஆச்சாரியார் வகையராக்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்" என்று பேசினாராம்.

இவருக்கு ஆத்மா இருக்கிறதா என்பதே நமது சந்தேகம். ஐயோ! நமது முதலியாரின் புத்தி இப்படியும் சபலமாய்ப் போகுமென்று நாம் எந்தக்காலத்திலும் எதிர்பார்த்ததேயில்லை. ஸ்ரீமான்கள் எம். கே. ஆச்சாரியார், சத்தியமூர்த்தி, ஏ. ரெங்கசாமி ஐயங்கார் வகையராக்களைவிட-இவர்களது நாணயத்தைவிட-ஸ்ரீமான் ஏ. இராமசாமி முதலியார் எந்த விதத்தில் தாழ்ந்தவர்? நமது முதலியாருக்கு என்ன கெடுதி செய்தார்; என்ன அடாத செய்கை செய்துவிட்டார்? அல்லது அவர்கள் "கக்ஷிக்கும்" இவர்கள் "கக்ஷிக்கும்" வித்தியாசம் தான் என்ன? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கோயமுத்தூரில் பேசிக்கொண்டிருக்கும் போது தனது முழு வேலையும் செங்கல்பட்டு ஜில்லாவிலேயே இருப்பதாகவும், தன்னுடைய "கணங்களை"யெல்லாம் அங்கேயே அனுப்பி எப்படியாவது ஸ்ரீமான் ஏ. இராமசாமி முதலியாரை ஒழித்துவிடப் போவதாயும் உறுதி சொன்னாராம். அவரது திருவாக்கைப் பரிபாலிக்க நமது முதலியார் மரவுரி தரித்துக்கொண்டு செங்கல்பட்டு ஜில்லாவுக்குப் புறப்பட்டுவிட்டார் போலும். அல்லது பிராமண அக்கிராசனமும் பிராமண "நற்சாக்ஷிப் பத்திரமும்" நமது முதலியாரை மயக்கி விட்டது போலும். இந்தப் பிராமணர்களே நமது முதலியாருக்கு வரவேற்புப் படித்துக் கொடுத்தாலும், "உண்மை அந்தணர்" என்று வெளியில் சொன்னாலும் இவரைப்பற்றி இந்த பிராமணர்கள் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்களென்பதை ஒரு சிறிதாவது ஞாபகப் படுத்திப்பார்த்தாரா? இப்படி, ஒரு ஆசாமியை தங்கள் வசப்படுத்திக் கொண்டு, அவர் வந்தார் மீதே வசை மொழிப் புராணம் பாடும்படி செய்து நமது காரியத்தை சாதித்துக் கொள்ளுகிறோம்" என்றுதான் நினைப்பார்கள், அவர்கள்

(இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

வோ பார்க்கிறது. பிராமணரல்லாதார்களுக்கு இனி ஒவ்வொரு வினாடியும் மிகுந்த விலை உயர்ந்ததாகும். ஒவ்வொரு பிராமணரல்லாதாரும் இனி உறங்கக்கூடாது. மகாத்மாவின் நிர்மாணத்திட்டமாகிய கதர், தீண்டாமை விலக்கு ஆகிய இரண்டுமே பிராமணரல்லாதாரின் ஜீவநாடியாகும். இதன் மூலமாய்த்தான் கடைத்தேற முடியும். உத்தியோக வேட்டையில் பிராமணரைப் பின்பற்றும் பிராமணரல்லாதாருக்கு இதன் மகிமை தெரியாது. ஆதலால் உண்மை பிராமணரல்லாதாரே! எழுங்கள்! கிராமப் பிரசாரம் செய்யுங்கள்! கிராமமெங்கும் "திராவிட"னையும் "குடி அரசை"யும் பரவச் செய்யுங்கள்.

வெலமகுல நாயுடு மக்கள் 2-வது மகாநாடு.

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் தலைமை வகித்தார்.

(ஒரு நிருபரிடமிருந்து)

வெலம நாயுடு 2-வது மகாநாடு, மதுரை ஜில்லா திருமங்கலம் தாலூகா குன்னத்தூரில் நாளது மீ 10உ பகல் 3-30மணிக்கு "திராவிடன்" ஆசிரியர், திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் தலைமையின் கீழ் கூடப்பட்டது. அக் கூட்டத்திற்கு, உள்ளூர் வெளியூர்களிலிருந்து சுமார் 2,500 பிரதிநிதிகள்வரை வந்திருந்தார்கள்.

முதலில் திண்டுக்கல் திரு. டி. வி. தம்புசாமி நாயுடு அவர்களால் தெய்வ வணக்கம் செய்யப்பட்ட பின்னர், உபசரணைக் கமிட்டித்தலைவர்

திரு. T. கோண்டைய்ய நாயுடு அவர்கள் செய்த வரவேற்பு பிரசங்கச்சுருக்கம்.

சகோதர சகோதரிகாள்!

இன்று கூடியிருக்கும் உங்களுக்கு அன்பார்ந்த நல்வரவு கூறும் பாக்கியம் எனக்கு அளிக்கப்பட்டிருப்பதைக் கொண்டு, யான் ஒரு அருமையான உரிமையும், பெருமையையும் பெற்றதாய் எண்ணுகிறேன். அன்பின் பெருக்கால் இந் நகர் வந்திருக்கும் உங்கள் வரவு, நல்வரவாகுக!

நமது சங்கம்:—நமது வெலம நாயுடு மகா ஜனசங்கம் தோன்றி சுமார் இரண்டு வருடங்களுக்குள்ளாகிறது. ஒவ்வொருவரும் சங்க முன்னேற்றத்திற்கு உழைக்க வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

ஒற்றுமை:—நம்மில் பலர் ஒரு சில அற்பக் காரியங்களுக்காக ஒற்றுமை யெனும் கோட்டையைத் தகர்த்து எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து பல இன்னல்களை விளைவித்து வருவதானது முற்றும் வெறுக்கத்தக்கதாகும்.

நாம் யார்:—நம் முன்னோர்கள், விஜயநகரத்திலிருந்து மதுரை வரை அரசாண்டுவந்திருக்கிறார்கள். இன்று நாம் எந் நிலைமையிலிருக்கிறோமென்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கல்வி:—நமக்குள் கல்வியானது பரவாமல் நாம் இதுவரை விவசாயம் வர்த்தகம், முதலிய, தொழிற் றுறைகளிலீடுபட்டு வருகிறோம். நம் சந்ததிகளையும் அவ்வாறே பள்ளிக்குச் செல்லா வண்ணம் தடுத்தும் வருகிறோம். ஆகையால் நம் மக்கள்களுக்குப் போதிய கல்வி ஞானத்தைப் புகட்ட ஒவ்வொருவரும் கங்கணம் கட்டிக் கொள்ளாவிடில் நமக்குச் செல்வாக்கில்லாமற் போய்விடும்.

நாகரீகம்:—நாம் விவசாயம், வியாபாரம், முதலிய தொழில்களிலீடுபட்டிருந்து நாகரீகமென்பதையே மறந்துவிட்டோம். தத்தம் சக்திக்கேற்றபடியாவது தற்கால நவீன உலகத்திற்கிசைந்தாற்போல் நடந்துவரவேண்டும்.

மதுவிலக்கு:— நம்மில் சிலர் மதுவுக்குச் சிநேகமாக இருந்து பல இன்னல்களுக்கு ஆளாகி கேவலப்படுகிறார்கள். ஆகையால் இனமேல் நம்மில் எவரும் பருகாவண்ணம் இம் மகாநாட்டில் ஒரு திட்டம் தயாரிக்கவேண்டும்.

தீண்டாமை:—நம் சகோதரர்கள் சிலரை நாம் தீண்டத்தகாதவர்களென்று அடிமையாகப் பாவித்து நடத்திவருவது பெரும்பிழை. ஆண்டவன் மக்களில் வித்தியாசமே இல்லையென்பதை உணர்ந்து அவர்பால் வேற்றுமை காட்டாது நடந்துகொள்ள வேண்டும்.

அரசியல்:— இராஜ்ஜியக்காற்று பலமாக வீசும் இது காலையில் நாம் எக்கட்சியில் சேருவதென்ற போதனை சிலபேருக்கு இருந்தாலுமிருக்கலாம். காங்கிரஸ் கட்சிக்குள் சுயராஜ்ஜியக் கட்சியென்று ஒன்றைப் பிராமணர்கள் ஏற்படுத்தியதால், காங்கிரஸுக்கு ஏற்பட்ட செல்வாக்கும், லக்ஷியமும், பொய்யும்பித்தலாட்டமுமாக முடிந்து காங்கிரஸுக்கு மதிப்புங் குறைந்து அரசியல் கட்சி நிலைமையுஞ் சீர்கெட்டுப் போய்விட்டது. ஆனால் நிலைதவறாது ஜஸ்டிஸ் கட்சி ஒன்றுதான் நம்மக்களுக்கு உயிர்த்துணையாக இருந்து வருகிறதென்பதை எவரும் மறுக்க இயலாது. ஆகவே, பிராமணரல்லாதவராகிய நாம் எல்லோரும் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆதரவளிக்கக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம்.

முன்னேற்றம்:— நாம் மற்ற சமூகங்களைப் போன்று முன்னேற்றமடையாது பின்னடைந்துள்ளோம். நாமும் முன்னேற்றமடைய பல இளைஞர்கள் போதிய ஊக்கமெடுக்காதவரையில் நாம் முன்னேற்றமடையமுடியாது.

சர். பி. டி. செட்டியார்:— முன்னேற்றமடையாதிருக்கும் கோடிக்கணக்கான தென்னிந்திய திராவிட மக்களைக் கண்விழிக்கச்செய்த நமது திராவிட சிங்கமாகிய சர். பி. தியாகராஜ செட்டியார் அவர்கள் மரணம் நமது அதிஷ்டக் குறைவேயாகும்.

ஆர். நரசிம்மலு நாயுடுகார்:— இம்மகா நாட்டை முதலில் ஆரம்பிக்க உதவியாய் நின்றும், இன்றளவா பொருளுதவி செய்தும், தளராத ஊக்கமும் விடாமுயற்சியோடு உழைத்துவரும் திரு. ஆர். நரசிம்மலு நாயுடு அவர்களைப்போல மற்றோர்களும், உதவிசெய்து நம்மவர்களுக்கு ஊக்கத்தை யுண்டாக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

முடிவுரை:— உலக சரித்திரங்களை நன்கறிந்தவரும் நமது வெலமகுலப் போறிஞருமான மகாநாட்டுத்தலைவர் திருவாளர் ஜே. எஸ். கண்ணப்பர் அவர்கள் மகாநாட்டை வெற்றியுடன் நடாத்தி நமக்கு வேண்டிய ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து நம் மக்கள் முன்னேற்றமடைவதற்கு பல நல்லுபதேசங்களைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவானாக! பிறகு,

மகாநாட்டுத் தலைவர் "திராவிடன்" பத்திராசிரியர் திரு-சனக் சங்கர கண்ணப்பர் நிகழ்த்திய சொற்பெருக்கின் சுருக்கம்.

அன்பும் அருங்குணங்களும் பொருந்திய பெரியோர்களே! சகோதரிகளே! சகோதரர்களே!

இரண்டாம் ஆண்டாகிய இவ்வாண்டிலும் நாயினும் கடையேனாய என்னையே இம் மகாநாட்டின் தலைவனாய்த் தெரிந்தெடுத்த உங்கள் பெருந்தகைமை பாராட்டத்தக்கதாகும். உங்கள் அன்பை என்றும் மறவேன்! மறவேன்!

முதல் மகாநாடு:—நமது முதலாவது மகாநாடு கூடி இற்றைக்கு 13 மாதங்களாகியும், நம் மக்களுள் உணர்ச்சி இன்னும் எழாதிருப்பது வருந்தத்தக்க தொன்றாகும். முதலாவது மகாநாட்டுக்குப் பின்பு இதுகாறும் ஒன்றும் நடைபெறவில்லையே என்று சிலர் மனத்தளர்ச்சி அடையலாம். அத்தகைய மனத்தளர்ச்சியை விட்டொழித்துப் பேரூக்கத்துடன் உழைக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். "தொடங்குங் காற்றுன்பம்" என்பதுபோல் துவக்கத்தில் எதைச் செய்தாலும் துன்பமாய்த்தான் இருக்கும். ஆனால் இறுதியிலோ எல்லாம் இன்பமாய் இருக்கும். நாமும் முதலில் சங்கத்தை நடத்துகின்ற இக்காலத்துப் பெருந்துயர் உற்றாலும், நம் சங்கம் வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுக்குங் காலத்து நாம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவிருக்கமாட்டாது; நாம் நம் சங்கத்தின் பழங்களைச் சுவைத்தலோடு, நம் மக்களும் அவர்கட்கு பிற்பட்டு வருவோரும் சுவைத்து உவகையுறுவார்கள். ஆகலான் அன்பர்களே! மனத்தளர்ச்சி உறவேண்டாம்! முன்னிலும் பன்மடங்கு பாடுபட்டு உழையுங்கள்!

பண்டை வரலாறு:—கருநாடக வடுகர்களாய நாம் எவ்வாறு வெலம நாயுடுகளாய் அழைக்கப்படுவோம் என்று நம்மவர்களுள் பலர் வினவுகின்றார்கள். நாம் 1161 முதல் கலியாணபுரத்தை அரசாண்ட விச்சலன் வமிசத்தைச் சார்ந்தவர்கள். நாம் முதல் முதல் துங்கபத்திரைக்கு வடக்கே இப்போதுள்ள அனந்தப்பூர் ஜில்லா பெல்லாரி ஜில்லா கடப்பை ஜில்லா கர்நூல் ஜில்லா முதலிய இடத்திலிருந்து வந்தவர்களாவோம். அந்நாடு கரிய பூமியை உடையதாதலால் கருநாடு அல்லது கருநாடகம் என்று சொல்லப்பட்டது. இந்த விச்சலனுடைய வமிசத்தைச் சார்ந்தவர் விஜய நகரத்தை 1509ம் வருடம் முதல் 1530 வரையில் அரசாண்ட கிருஷ்ண தேவராயலு. அவர் சீரும் சிறப்புடன் அரசாண்டு பல நாடுகளைப் படையெடுத்து வந்தார். இவர் பாண்டிய நாட்டை 1522-ம் ஆண்டில் வென்று நாகம நாயுடுவைத் தம் பிரதிநிதியாய் ஆண்டுவரச் செய்தார். இக்காலத்துத்தான் நாம் துங்கபத்திரைக்கு வடக்கேயுள்ள கருநாடகத்திலிருந்து வந்து இங்குக் குடியேறினோம். இவ்வாறு பாண்டிய நாட்டை ஸ்ரீ கிருஷ்ண தேவராயலு காலத்தில் வென்று குடியேறின நம்மைத் தமிழ்நாட்டார் கருநாடக வடுகர் என்ற பெயரிட்டு அழைத்தனர். இவ்வுண்மையைப் பெரியபுராணம் வேப்பத்தூரார் திருவிளையாடல்புராணப்பாடல்களில் அறிந்துகொள்ளலாம். ஸ்ரீகிருஷ்ண தேவராயலுக்குத் துணையாய் இருந்த (1) ஆர்வீட்டிவாரு, (2) நாவுகவாரு, (3) சுத்தியாலுவாரு (4) பெம்ம சனிவாரு (5) வெலம அல்லது வெல கோட்டிவாரு (6) பூட்டஹரிவாரு (7) தூரண்டிவாரு, (8) துலாவதொரலு (9) இராவலவாரு என்ற ஒன்பது மகா சனங்களுள் வெலம அல்லது வெலகோட்டிவாரு நாமாகும். வடக்கேயுள்ள வெலம நாயுடுகளின் வீட்டுப் பெயர்களும் அவர்கள் கலியாணச் சடங்குகளும் இறப்புச் சடங்குகளும் நம்மவர்களுடன் ஒத்திருக்கின்றன. ஆதலான் நாம் தெலுங்கில் வெலம நாயுடு என்றும் தமிழ்மொழியில் கருநாடக வடுகர் என்றும் அழைக்கப்படுகின்றோம். இதுதான் நம் பண்டை வரலாறு.

தற்கால நிலை:—இத்தகைய மேம்பாடுள்ள நிலைமையில் பிறந்திருக்கும் நம்மவர்களின் தற்கால நிலைமையை நோக்க நெஞ்சம் பதைபதைக்கின்றது. கண்கள் நீர் சிந்துகின்றன. நம்மவர் தொகையில் ஏறக்குறைய ஒரு இலட்சமாய் இருந்தும் ஆங்கிலம் படித்தோர் எத்தனைபேர் இருக்கிறார்கள்? ஒரு சிலரே. இக்குறையை நினைக்குந்தோறும் எவர் மனந்தான் வருந்தாதிருக்கும்?

இனிச் செய்யவேண்டுவது:—நாம் முன்னேறவேண்டுமாயின், மற்ற வகுப்பார் எவ்வழிகளைப் பின்பற்றி இருக்கின்றார்கள் என்பதையும் ஆராய்ந்து நோக்குதல் வேண்டும். நாடார் வகுப்பார் கம்மவாரு வகுப்பார் சில ஆண்டுகளுள் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களென்பதை நாம் ஒவ்வொருவரும் ஊன்றிப்பார்த்தல் வேண்டும். அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ அவர்களிடை ஒரு புத்துயிர் கிளம்பி அவர்கள் முன்னேற்றமடைந்து வருகின்றார்கள். இதற்கு காரணமென்ன? அவர்கள் சபையும், அவர்கள் மகாநாடுகளுமேயாகும். ஆதலான் நம் வகுப்பார் முன்னேற்றமடைதற்கு வெலம நாயுடு மகாசன சங்கம் என்ற சங்கமொன்றை நிலைநாட்டிச்சென்ற ஆண்டில் முதலாவது மஹாநாட்டை நடாத்தினோம். இவ்வாண்டில் இரண்டாம் மஹாநாட்டை நடாத்துகின்றோம். இச்சங்கத்தின் வாயிலாகவும் இத்தகைய மகாநாடுகளின் வாயிலாலுமே, நாம் முன்னேற்றமடையவேண்டியவர்களாய் உள்ளோம்.

கல்வி:- எவ்வகுப்பும், எந்நாட்டாரும் முன்னேறுதற்கு இன்றியமையாது வேண்டற்பாலது கல்வியே. கற்றோர்கட்கு எல்லாம் ஊரே; அவர்கள்

எங்கும் மதிக்கப்படுகின்றனர். ஆகையினுற்றான் கற்றவர்கள் எங்கும் சென்று அறிவென்னும் கலப்பையைக் கொண்டு உழுது பிழைத்துக் கொள்ளுகிறார்கள். ஆகலான் நம்மக்கள் மற்ற வகுப்பாரைப் போன்று கல்வியைக் கற்பதில் முந்துதல் வேண்டும். ஆண்களாயினும், பெண்களாயினும் கட்டாயம் படிப்பித்தல் வேண்டும். கிணற்றுள்ளே இருக்கும் தவளைக்கு வெளியே வந்தால்தான் உலகம் முழுதும் தெரியுமென்பதுபோல் நம்மக்களும் படித்தால்தான் அறிவுபெற முடியும்; செல்வத்தில் வாழமுடியும்; உலக இன்பத்தை நுகரமுடியும்.

ஆங்கிலக்கல்வி:- இப்பொழுது நமக்கு அரசாங்க மொழியாய் இருப்பது ஆங்கிலமே. நம்மவர்களில் இப்பொழுது ஒருவராவது பட்டதாரிகள் கிடையாது. மெற்றிக்குலேசன்வரைபடித்தவர்கள் இருவர் மூவரே இருக்கின்றனர். ஆகலான் இங்குக்கூடியிருக்கும் பெரியோர்களைத் தம் மக்களுக்கு ஆங்கிலம் படிப்பிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தெலுங்கு மொழி:—வெலம நாயுடு மக்களாய நாம் நம் தாய்மொழி மறந்தவர்களாய் இருக்கின்றோம். நீங்கள் இப்பொழுது பேசுவது நல்ல தெலுங்காகமாட்டாது. நீங்கள் பேசுவது நூற்றுக்கு 75 சொற்கள் தமிழ் சொற்களாகவே இருக்கின்றன. இச் சங்கத்தை நீங்கள் பலப்படுத்துவீர்களாயின் இச் சங்கத்தின் வாயிலாகவே நம் மக்கள் வாழ்கின்ற ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடங்கள் நிலைநாட்டி நம் மக்களுக்குத் தெலுங்கைக் கற்பிக்க எற்பாடு செய்யலாம். இஃது ஓர் வழி. இனி இரண்டாவது வழி நம் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் தெலுங்கு கற்பிக்க எற்பாடு செய்யவேண்டுமென்று தாலூகா போர்டாரைக் கேட்டுக்கொள்வது.

தொழில்கள்:—நாம் எல்லோரும் விவசாயிகளாய் இருக்கின்றோம்; நிலத்து விளைவையே நம்பி பிழைக்கின்றவர்களாய் இருக்கின்றோம், ஓர் ஆண்டில் மழையில்லாதுபோயின், நாம் படுந்துயருக்கு அளவு கிடையாது. அதனுல் கடனில் மூழ்கி வறியராகின்றோம் ஆதலால் நிலத்தை மட்டும் நம்பியிராமல் நிலத்து வேலை செய்யுங் காலந் தவிர மற்ற வேளைகளில் நம் வயிற்றுப் பிழைப்புக்கு ஆதாரமாய் இருக்கக்கூடிய கைத்தொழில்களை கற்றுக்கொண்டு அவற்றை நாடோறும் செய்தல் வேண்டும். உதாரணமாக நாம் நிலத்து வேலை செய்ததுபோக ஒழிந்த நேரங்களில் காந்தியடிகள் சொல்லுவதுபோன்று கை இராட்டினத்தைச் சுற்றி நூல் நூற்கலாம் இப்பொழுது கை இராட்டின நூலுக்கு மிகுந்த தேவை இருக்கின்றபடியால், நூல் நூற்று அதனுல் வரும் வரும்படியையும் பெற்றுக்கொள்ளலாம் பெண்மக்கள் இதைச் செய்வார்களெனின் காடுகளில் நன்றாய் விளையாவிட்டாலும், கடனுக்குள் அமிழவேண்டுவதில்லை இனிக் கை ராட்டினம் சுற்றுவதைப்போன்று பனியன்கள் செய்தல் நிக்குச்சி செய்தல், சோப்பு செய்தல், பஞ்சு அரைத்தல், முதலிய இவை போன்ற பல கைத்தொழில்களைக் கொள்ளல்வேண்டும்

விவசாயம்:—நாம் விவசாயம் செய்வதிலேயும் பழைய முறையையே கைக்கொண்டு வருவதால் நம் நிலங்கள் நாளுக்குநாள் சத்து இல்லாது போகின்றன நல்ல ஆழமான கலப்பைகளைக்கொண்டு உழுதலோடு, புது முறையில் தயாரிக்கப்படும் எலும்பு எருவை நிலத்துக்குப் பயன்படுத்துவோமாயின் அதிகமாய் விளைவைக் கொடுக்கும் என்பது உறுதி,

பஞ்சாயத்து:—நம் மக்கள் தத்தமக்குள் கலகம் செய்துகொண்டு, நெற்றி வேர்வை நிலத்தில்விழ உழுது பாடுபட்டுத் திரட்டிய பணத்தைக் கிரிமினல் கோர்ட்டுகளிலும் சிவில் கோர்ட்டுகளிலும், வீணுக்குகிறார்கள், பணம் வீணாய்ப் போதலோடு குத்துகளும், கொலைகளும் அவைகளால் தண்டனைகளும் எற்படுகின்றன, ஒரு பெரிய சாதியாருள் கட்சிகளும் சண்டைகளும் எற்படுதல் இயல்பே! இத்தகைய சண்டைகளை நாம் நமக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி போட்டி போட்டுக்கொண்டு வக்கீல்களுக்கும், போலீஸ்களுக்கும் பணம் கொடுப்பது முறையாகாது, ஒழுங்காகாது, நம் பெரியோர், நம் முன்னோர்கள் பஞ்சாயத்தின் மூலமாகவே எல்லாவழக்குகளையும் தீர்த்துக்கொண்டனர், இந் நல் வழியை அவர்கள் பிள்ளைகளாய நாம் என் பின் பற்றுதல் கூடாது,

நம் சங்கம்:—நீங்கள் ஒற்றுமையாய் இருந்தாற்றான் நம் சங்கம் வலுப்படும், நம் சங்கம் இப்பொழுது ஓர் ஆண்டுக் குழவியாய் இருக்கின்றமையான், உங்கள் அன்பென்னும் பாலை அவாவி நிற்கின்றது, இச்சங்கம் உங்கள் குழந்தையாதலின், அதனை வளர்க்கும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகவே இருக்கின்றது, இக் குழந்தையை இப்பொழுது நீங்கள் வளர்த்து விடுவார்களாயின், பிறகு இக் குழந்தையே, நம்மாழ்வார் போன்றும், திருஞான சம்பந்தர் போன்றும், உங்கள் குழந்தைகளை எல்லாம் வளர்க்கும், ஆகையால் இங்குக் குழுமியுள்ள பெரியோர்காள்! இச் சங்கத்தை வளர்த்து பெரும் புகழும் பேறும் எய்துமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்,

வளர்ப்பதெவ்வாறு:—இச் சங்கம் என்று வலுப்படுகின்றதோ அன்றே நான் உயர்ந்தவனாவேன்; அன்றே நான் இவ்வுடம்பாற் பெற்ற பயனை எய்தியவனாவேன், அன்றே நான் பிறவிப் பெருங்கடலைக் கடந்தவனாவேன், பெரியோர்களே இச் சங்கத்தை வலுப்படுத்துதலையே இன்றிருந்து உங்கள் கடனாய்க் கொள்ளுங்கள்! கொள்ளுங்கள்! இதுவே நீங்கள் எனக்குச் செய்யும் கைம்மாறு; நான் வேறொன்றும் உங்கள் பாலிருந்து எதிர்பார்க்கின்றேனல்லேன்,

முடிவுரை:—பெரியோர்களே! இதுகாறும் என் வெற்றுரையைக் கேட்டுக்கொண்டிருந்த உங்கள் பொறுமையை நான் பாராட்டுகின்றேன், நீங்கள் எனக்களித்த பெருமையை யான் என்றும் மறப்பேனல்லேன், நீங்கள் வாழையடி வாழையாய் வாழ்வீர்களாக, நம் சங்கமும் வாழ்க! வாழ்க! பல்லாண்டு பல்லாண்டே!

பின்னர் திரு. தம்புசாமி நாயுடு, திரு. எஸ். கூடலிங்கம் பிள்ளை முதலியவர்கள், வெலம நாயுடு முன்னேற்றத்தைக் குறித்தும் கம்மவாரு, நாடார் மகா ஜனங்கள் முன்னேற்றத்தைக் குறித்தும் நீண்டதோர் சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள். இரண்டாவதாகப் பெரிய, திரு. எஸ். கூடலிங்கம் பிள்ளை அவர்கள், கம்ம வாருக்கும், நாடார்களுக்கும் இருந்து வரும் விரோதத்தை இனி விட்டு விட்டு எல்லோரும் ஒரு தாய் மக்கள் போன்று பரஸ்பர சிநேகிதத் தன்மையில் இருந்து வரவேணுமாய் வற்புறுத்திப் பேசினார்கள்.

தீர்மானங்கள்.

ஒவ்வொரு வெலமநாயுடுவும், வெலமநாயுடு சங்கத்தில் அங்கத்தினராகவேண்டும்.

தெலுங்குப் பள்ளிக்கூடம் ஒன்று புதிதாக குன்னத்தூரில் எற்படுத்த வேணுமாய், உசிலம்பட்டி தாலூக்கா போர்டைக் கேட்டுக்கொள்வதோடு, டி போர்டு மெம்பர் திரு. முத்துசாமி நாயுடு அவர்கள் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

பின்னர் திருப்பரங் குன்றத்திலிருக்கும் மடத்தைக் குறித்தும் பெண்மக்கள் ஓய்வு நேரங்களில் செய்யவேண்டிய வேலையைக் குறித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டது.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை முடிந்தபிறகு திரு. முதலியாரை கண்ணெடுத்துப் பார்ப்பார்களா? சுயராஜ்யக் கக்ஷியின் அயோக்கியத்தனத்தை ஒருநாள் வெளியில் எடுத்துச் சொன்னதற்குத் தானே "சாது" முதலியார்,-"உண்மை அந்தண" முதலியார், "மாரீச" முதலியாராக மாற்றப்பட்டார்?

"மேல் நாட்டாருக்கு வயது 42- கீழ் நாட்டாருக்கு வயது 22- ஆதலால் எம், கே. ஆச்சாரியாருக்கு ஓட்டுகொடுங்கள், எ. இராமசாமி முதலியாருக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள்" என்று சொன்னால்என்ன அருத்தம்? எம். கே. ஆச்சாரியார் பிரம்மாவா? எல்லோர் தலையிலும் நூறு, நூறு வயது என்று எழுதி விடுவாரா? அல்லது எ. இராமசாமி முதலியார் எமனா? 22 வயதிலேயே எல்லோரையும் கொண்டுபோய் விடுகிறாரா? ஐயோ! பாவம்! திரு. வி. கலியாண சுந்தர முதலியாரின் கல்வியும்,- பாண்டித்தியமும்,- பிராமணரல்லாதார் பிறவியும் செங்கல்பட்டு ஜில்லா பாமர ஜனங்களிடம் போய் "மேல் நாட்டாருக்கு 42-வயது, கீழ் நாட்டாருக்கு 22-வயது. ஆதலால் இராமசாமி முதலியாருக்கு ஓட்டுப் போடாதீர்கள்; எம். கே. ஆச்சாரியாருக்குப் போடுங்கள்" என்று சொல்வதற்குத் தானா பிரயோஜனப்பட வேண்டும். இவையனைத்தையும் பாமர ஜனங்கள் அறியும் நாள் எதுவோ அதுதான் விடுதலை நாள், அதுவரை ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியார் போன்றோர்கள் நாள் தான்.

சுசீந்திரம் சத்தியாக்கிரகம்.

சுசீந்திரம் சத்தியாக்கிரகம் எதோ ஒரு ரகசிய ராஜியின்மேல் நிறுத்தப்பட்டதாகவும் சீக்கிரத்தில் எல்லாப் பிரஜைகளுக்கும் அனுகூலமான முடிவை திருவாங்கூர் அரசாங்கத்தாரால் நடத்திவைக்கப்படும் என்றும் பிரஸ்தாபம் வந்தது. ஆனால் எறக்குறைய சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டு இரண்டு மாதத்திற்கு மேலாகியும் இன்னமும் அதைப்பற்றி ஒரு விபரமும் தெரிவதற்கில்லாமல் கிணற்றில் கல்லு போட்டது போல் மூடுமந்திரமாயிருக்கிறது. கமிஷனர் பிட்டுதுரை மிகவும் நல்லவர். எல்லாருக்கும் சம உரிமை கிடைக்கவேண்டும் என்பதில் அக்கரை உள்ளவர். அனல் திவானோ கிறிஸ்தவராயிருந்தாலும் மலையாள பிராமணர்கள் தயவைப்பெற்று புகாரில்லாமல் காலந்தாட்டிவிட்டுப் போகலாம் என்கிற ஆசையுள்ளவராம். இவர்களின் நிலைமையை நாம் கவனித்துக் கொண்டிருப்பது சத்தியாக்கிரகத்துக்கு நீதி செய்ததாகுமா? ஆதலால் சத்தியாக்கிரகத்தை மறுபடியும் துவக்கும்படி வேண்டுகிறோம்.

முடிவில் சர். பி. தியாகராயர், சி. ஆர். தாஸ் அவர்கள் மரணத்தால் இம்மகாநாடு வருந்துவதாக எல்லோரும் எழுந்து நின்று தீர்மானம் நிரைவேறியபின்னர் கூட்டங் கலைந்தது.

அத்திப்பாளையத்தின் அகம் வேறுபடுவதா?

மகாத்மா காந்தியடிகளின் தெய்விக இயக்கம் தொடங்கின காலந்தொட்டே, அத்திப்பாளையத்தாரும் அவ்வியக்கத்தில் ஆழ்ந்த அன்பு கொண்டனர். கோவை ஜில்லாவில் 250 கம்மவார் கிராமங்கள் உள. அவற்றுள் கதர் இயக்கத்தில் தலைப்பட்டுக் காந்தியடிகளின் கட்டளையைத் தலையில் தாங்கி, அரும்பெருந்தொண்டு செய்த கிராமங்கள் சில; சில. ஒத்துழையா இயக்க வாரம்பத்தில், மதுவிலக்கு செய்வதற்கு முன்னணியில் நின்று, பல ஊர்களினும் மதுவிலக்குப் பிரசாரம் செய்தவரும் அத்திப்பாளையத்து வீரர்களே; இளஞ்சிங்கங்களே. இவ்வீர இளஞ்சிங்கங்களாலே, கம்மவார்களுக்குள் முதன் முதல் கதர் தோற்றுவித்த புண்ய பூமி அத்திப்பாளையமே என்னும் அழகிய புகழ், கம்மவார்கள் அணியப் பெற்றனர். உயரிய செல்வமும், சிறப்புமுள்ள கம்மகுல இளங்குமரி, ஊர் ஊராகத் தேசியக்கொடியைத் தாங்கித் தெய்விக இயக்கத்தைப்பரவச்செய்த பெருமை என்னென்பது; என்னென்பது. சுருங்கக் கூறின் காந்தியடிகளின் கதர் இயக்கம் பொதுவாகக் கோவை நாடு முழுவதும், சிறப்பாகக் கம்ம நாடு முழுவதும் பரவினது; பரவுகின்றது. என்னின் அப்பெருமை முழுவதும் அத்திப்பாளையத்தார்க்கேயாகும். பல அரும்பெருந் தலைவர்களை வரவழைத்து, மகாநாடுகள் கூட்டித்தேசிய உணர்ச்சியைப் பரவச் செய்த பெருமையும் அத்திப்பாளையத்தார்க்கே உரியனவாகும். அத்திப்பாளையத்தில் கதர்ச்சாலையுண்டு. தொண்டர் படையுண்டு; இராட்டினச்சங்கம் உண்டு; தேசிய வாசகசாலையுண்டு. இன்னும் தேசிய இயக்கத்தின் பல மூலப்பொருள்கள் உண்டு. இராட்டினத்தில் வகைதேர்ந்து பதக்கம் பெற்ற பெண்மணிகளுமுண்டு.

இத்துணைப் பெருமைவாய்ந்த அத்திப்பாளையம், இதுகாலை என்னிலையில் உள்ளது. கதர்ச்சாலையைக்காணோம். வாசகசாலையின் வாயடைத்துள்ளது. தொண்டர் படையின் வீரம் சோர்ந்தது. இராட்டினம் இளைப்பாறுகின்றது. பதக்கம் பெற்ற பெண்மணிகள் பாவையாடுகின்றனர். இத்தனைக்கும் காரணம் என்ன? தொண்டர்களின் சோர்வன்றோ? பிரிவன்றோ? அத்திருமன்றோ? பல நாளாகப் புகைந்து கொண்டிருந்த தொண்டர்களின் கோபக்கனல் வையம்பாளையத்தில் ஒற்றுமைக்கட்டை எரிக்கத்தொடங்கிற்று. வையம்பாளையத்தில் மகா நாட்டைக்கூட்டியதற்கும், கலைத்ததற்கும் காரணர் இன்னார், என்பதை விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம். கூட்டினவர் பக்கலோ கலைத்தவர் பக்கலோ எவர் பக்கலோ பிழை இருந்தேயிருக்கும். அப்பிழையினையாவர் மாட்டுச் சுமத்துவது. உண்மையில் பிழை செய்தோரும் பிழையைப் பிழை என ஒப்புக்கொள்ளுகின்றனரோ. ஓ! ஓ! உலகம் அந்நிலையில் உள்ளதோ! அதற்காக யாரைத்தாக்குவது? யாரைத்தாங்குவது? ஒருவர் செய்த பிழையைப் பொறுக்காது தூற்றுவதினும் பின்னரும் பகைமையே அதிகம் விளையும் என்பது உலக வியல்பு. ஒன்று உண்மையினேயே நிகழ்ந்ததென்று வைத்துக் கொள்வோம். அவ்வுண்மையினைப் பத்திரிகைகளுக்கு எழுதின் அதனைக் கண்டோர் பிழையென ஒத்துக்கொள்ளுகின்றனரா? இல்லையே! அதற்கு மறுப்பன்றோ எழுதுகின்றனர். இங்ஙனம் மறுப்பிற்கு மறுப்பன்றோ வளரும். ஆகையால் சிறு சிறு குறைகளை முதலிலேயே பொறுத்து விட்டுவிடுதல் நலம்; நலம்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

எனனும் தெள்ளிய மொழியை உள்ளத்திற்கொண்டு உறாக்கொண்டு செய்வதே உத்தமத்தொண்டர்களின் கடமை; கடமை.

அத்திப்பாளையமும் அகம் வேறுபட்டு, காந்தியடிகளின் கதர் இயக்கத்தில் பிளவுபட்டதென்றால் இதனினும் பேதமை என்னே! என்னே! இராமசாமி நாயக்கர் ஈரம் நிம்பிய அத்திப்பாளையமே! நீயும் பிளவுபடலாமோ? பேதைமையுறலாமோ? நினது பண்டைய ஒற்றுமையை ஓர்ந்து பார்; வீரத்தை விளம்பிப்பார். இவையிரண்டையும் கணநேரம் கருதிப்பார்க்கின் பிளவு இருக்குமோ? பேதமை யிருக்குமோ? தேசத்தின் பிரிவினைக்காற்று தங்களையும் பூசல் காற்று உங்களையும் வீசிற்றோ? வீசிற்றோ? அத்திப்பாளையம் ஆண்சிங்கங்களே! இளம் வீரர்களே! இந்நிலைமை உங்கட்கு ஒவ்வாது; ஒவ்வாது. ஒரு சமையம் கருத்தை ஒரு வழியில் நடத்தி இதுகாலை காந்தியடிகள் கொண்டுள்ள தவக்கோலத்தையும், ஆச்சிரம வாசத்தையும் சிந்தித்துப்பார்த்திர்களேயானால், உங்கள் பிளவு எங்கே? எங்கே! இனியும் பிரிவினை கொண்டு எவையும் புரிவீர்களேயானால் அப்பக்கம் கதர் இயக்கம் அழிநிலைக்கு வந்து விடும். அப்பழியும் யாவரைப்பற்றும்; ஆகையால், காந்தியடிகளைக் கருத்தில் வைத்து ஒற்றுமையாகக் கதர்த் தொண்டு புரிமின்; கதர்ச்சாலை காணுமின்; வாசகசாலை திறமின்; இராட்டின இவ்விசையை இசைமின்; பெண் மக்களின் பெருமையைப் புலப்படுத்துமின். அத்திப்பாளையத்தின் அரும்புகழைக்காமின்; காமின்.

காந்தி தாஸன்.

கோயமுத்தூர் ஜில்லா கம்ம மகாஜன சங்கம்.

பீளமேடு சர்வஜன ஹைஸ்கூலில் 9-5-26 தேதி கோயமுத்தூர் ஜில்லா 2-வது கம்மகான்பரென்ஸ் கூட்டுவதற்காக ஆலோசனைக் கமிட்டி மீட்டிங்கு பொப்பட்டி ஸ்ரீமான் எஸ் இரங்கசாமி நாயுடு அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. சுமார் 250 கம்ம கிராமங்களிலிருந்து பிரபல கம்ம மிராஸ்தார்களான சுமார் 350 பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

கான்பரென்ஸ் அவசியம் என்ற விஷயமாய் ஸ்ரீமான் பி. எஸ். ஜி. கெங்கா நாயுடு அவர்கள் உபந்நியாசம் செய்தார். பிறகு ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு நாயுடு அவர்கள் 2வது கான்பரென்ஸ் பல்லடம் தாலூக்கா காடிவாலி கிராமத்தில் 1926-௵ ஜூன்-௴ 12, 13-௳ கூட்டலாமென்று பிரேரேபித்து ஸ்ரீமான் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் அமோதித்தார். ஷை கிராமம் இடம் வசதி குறைவாயிருப்பதால் திருப்பூர் பல்லடம் முதலிய இடங்களில் கூட்ட வேண்டுமென்று ஜி. நாராயணசாமி நாயுடு பிரேரேபிக்க, இதனை ஸ்ரீமான் வி. லக்ஷ்மி நரசிம்மலு நாயுடு B. A. B. L. ஆமோதித்தார். ஷை திருத்தம் வாபீஸ் பெற்றுக்கொள்ளப்பட்டு 1926-௵ ஜூன்-௴ 12, 13-௳ களில் காடிவாலி கிராமத்தில் கூட்டலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

கான்பரென்ஸ் தலைவர் தேர்ந்தெடுக்கும் விஷயம் உபசரணைக்கமிட்டியார் வசம்விட்டு வைத்து இச்சபையில் பிரேரேபித்த கனவான்கள் ஸ்ரீமான் கள்ளான் வி. இராமகிருஷ்ணா M. A. B. Sc, I. C. S., ஜெயப்பூர் திவான்; ராவ் பகதூர் B. முனுசாமி நாயுடு B. A. B. L., M. L. C., சித்தூர் டிஸ்டிரிக்ட் போர்டு தலைவர்; P. பக்தவத்சலு நாயுடு, G. ரங்கய்ய நாயுடு, சென்னை கார்ப்பரேஷன் அங்கத்தினர்கள், C. வெங்கடரங்கம் நாயுடு M. L. C.; S இராமசாமி நாயுடு M. A. B. L. ராமனாதபுரம் ஜில்லா; G. குப்புசாமி நாயுடு கோவை முனிசிபல் கவுன்சிலர்; P. S. G. கெங்கா நாயுடு; R. V. லக்ஷ்மிய்ய நாயுடு கோவை தாலூகா உபவி அக்கிராசனாதிபதி; A. R. குருமூர்த்தி நாயுடு B. A. B. L. உடுமலை முனிசிபல் கவுன்சிலர் மேற்கண்ட கனவான்களுக்குள் ளாக ஒருவரைத் தேர்ந்தெடுக்க உபசரணை சபையார் சமுகம் இந்த உரிமையைக் கொடுப்பதாகத் தீர்மானிக்கப் பெற்றது.

உபசரணை சபைத் தலைவர் ஸ்ரீமான் கே. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள். உபசரணை சபை உப தலைவர் ஸ்ரீமான் வி. லக்ஷ்மிநரசிம்மலு நாயுடு. செக்ரெடரிகள், ஸ்ரீமான்கள் நாராயணசாமி நாயுடு, ஸ்ரீனிவாசலு நாயுடு. பொக்கிஷியர் ஸ்ரீமான் உத்தம கே. இராமசாமி நாயுடு. உதவி பொக்கிஷியர் ஸ்ரீமான் வெங்கடபதி நாயுடு.

உபசரணை கமிட்டி மெம்பர்கள்.

லக்ஷ்மி நாராயணசாமி நாயுடு, தாலூகா போர்டு தலைவர் பல்லடம். ம. சாமி நாயுடு. பால கிருஷ்ணம நாயுடு, கொ. கிருஷ்ணம நாயுடு; சின்னசாமி நாயுடு, ராஜா கோபாலசாமி நாயுடு, ச. கிருஷ்ணசாமி நாயுடு, ச. திருவேங்கடசாமி நாயுடு, பாங்கு சுப்பா நாயுடு முத்து நாயுடு, கஸ்தூரி ரங்கப்ப நாயுடு. R. இராமசாமி நாயுடு, நா. திம்ம நாயுடு. நா. வெங்கிடசாமி நாயுடு, K சின்னசாமி நாயுடு, சென்னப்ப நாயுடு, ரெங்கசாமி நாயுடு ம. கிருஷ்ணம நாயுடு, கி. இராமசாமி நாயுடு. வெ. ஸ்ரீனிவாசலு நாயுடு, இஞ்சினீர் R. நாராயணசாமி நாயுடு, ரங்கசாமி நாயுடு. அ. கெ. குருசாமிநாயுடு, மானேஜிங் ஏஜண்டு ராதா கிருஷ்ண மில், பொன்னுசாமி நாயுடு. மேலேகண்ட கனவான்களுடன் இன்னும் ஷை தாலூகாவில் வேணும் மெம்பர்கள் அவசியம் என்று உபசரணை சபையாருக்குத் தோன்றினால் எடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்பட்டது. நடத்தப்போகும் 2வது கம்ம கான்பரென்சின் செலவினங்களுக்கு இப்பொழுது ஏற்படுத்தப்பெற்ற உபசரணை சபையார்கள் தங்கள் இஷ்டம்போல் செலவுகளில் பண உதவியையும் மற்ற ஜன சகாயத்தையும் பெற விரும்புகிறார்களோ அவ் விருப்பங்களுக்கு இச்சபையோர்களும் இணங்குவதாகவும் அவர்கட்கு வேண்டிய ஒத்தாசைகளையும் செய்வதாயும் ஏக மனதாய் தீர்மானிக்கப்பட்டது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

போனதோடு ஒவ்வொரு சமூகங்களுக்கும் நிரந்தரமான குறைகள் ஏற்பட்டு சமூகக் கொடுமைகளால் அழுந்திக்கிடக்கின்றதுடன் தேசநன்மை, பொது நன்மை, சுதந்திரம் விடுதலை என்று ஏற்படுவதெல்லாம் ஒரு சமூகத்திற்கு நன்மை, ஒரு சமூகத்திற்கு தீமை, ஒரு சமூகத்திற்கு அதிக சுதந்திரம், ஒரு சமூகத்திற்கு அதிகமான அடிமைத்தனம் என்பதான பலனைத்தான் கொடுத்து வருகிறதேயல்லாமல் எல்லாச் சமூகத்திற்கும் சமமான நன்மை, சுதந்திரம், விடுதலை ஏற்படுவதில்லை. ஏனெனில் சில சமூகம் எக்காரணம் பற்றியோ முன்னணியில் இருந்து, கிடைக்கும் நன்மைகளை அபகரித்துக் கொள்ளுகின்றன. பல சமூகம் பின்னணியில் இருந்து அன்னிய சமூகத்திற்கு உழைத்துவிட்டு தேய்ந்துகொண்டு வருகின்றன. உதாரணமாக நமது நாட்டில் காங்கிரஸ் இல்லாதபோது பிராமணரல்லாத சமூகத்திற்கு அரசியலிலும் பொதுவியலிலும் இருந்த சுதந்திரமும் செல்வாக்கும் காங்கிரஸ் ஏற்பட்டபிறகு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்துவிட்டது. அரசியலிலும் பொதுவியலிலும் இப்போது அதிகமான செல்வாக்கு பிராமணர்களுக்குத்தான் இருக்கிறது. பிராமணரல்லாதாரில் நாடார் சமூகத்திற்கு அதிக குறைவாய்த்தான் இருக்கிறது. இந்த நாடார் சமூகமும் தங்களுக்கென ஒரு சமூகத்தை வைத்துக்கொண்டு சமீபகாலமாய் அதற்கென்று உழைக்காமலிருந்திருந்து வெறும் தேசபக்தியையும் சுதந்திரத்தையும் பேசிக்கொண்டு பொருளற்ற 'தேசபக்தர்களாய்' 'காங்கிரஸ்'காரர்களாய் இருந்திருந்தால் உங்கள் நிலை என்னமாயிருந்திருக்கும். வழிநடை பாதையைக் கூட அடைந்திருக்க மாட்டீர்கள். தீண்டாதவர்கள் கூட்டத்திலேயே இன்னும் இருந்திருப்பீர்கள். உங்கள் பெரியார்கள் சிலர் நாடார் மகாஜனசபை என்று ஒரு சபை ஏற்படுத்தி அதின்மூலம் உங்கள் சமூகத்திற்கு கொஞ்சம் சுயமரியாதை சம்பாதித்துக் கொடுத்தபிறகு இப்பொழுது உங்களில் பலர் "தேசபக்தர்," களாய் வந்துவிட்டார்கள். தனிசமூக முன்னேற்றத்திற்கு ஸ்தாபனமில்லாத, உழைப்பாளிகள் இல்லாத பல சமூகங்களின் கதி இப்போது என்னமாயிருக்கிறது? "சக்கிலி" "பறையர்" "பள்ளர்" என்கிற பல பாரம்பரையாய் பொதுஜன உழைப்பாளிகளாய் இருந்து வரும் சமூகங்களின் கதி எப்படி இருக்கிறது? இந்திய சமூகத்திற்கு அரசாங்கத்தாராலும் காலக்கிரமத்தாலும் பல "சீர்திருத்தங்கள்" வந்தும் இந்தக்கூட்டத்தாருக்கு என்ன நன்மை கிடைத்திருக்கிறது. சர்க்கார் தயவிருந்தால்தானே தெருவில் நடக்கலாம், மனிதர்கள் கண்களில் தென்படலாம் என்றிருக்கிறது. அவர்களுக்கும் தங்கள் சமூக முன்னேற்றச் சங்கங்கள் இருக்குமானால் கூடியவரை அவர்களும் குறைந்தபக்ஷம் உணர்ச்சியுள்ளவர்களாகவாவது ஆகி இருப்பார்கள். மகமதிய கிறிஸ்துவ சகோதரர்கள் தங்கள் சமூகமுன்னேற்ற சங்கத்தின் மூலமாய் சுயமரியாதை பெற்றார்களேயொழிய "காங்கிரசினாலும்" "தேசபக்தியினாலும்" அல்லவே அல்ல. ஆதலால் மற்றசமூகத்தாரிடம் சமஉரிமை பெற்றுக்கொண்டு பிறகு பொது நலத்திற்கு பாடுபட்டால் பிறகு பொது உரிமை சமமாய் அடையமுடியும். ஆதலால் நாடார் சமூக முன்னேற்றத்தை உங்கள் சங்க நோக்கத்தில் முதன்மையாய் வைத்திருப்பதுபற்றி நான் மிகுதியும் சந்தோஷப்படுகிறேன். இதுசரியான அளவு கைகூட எல்லாம்வல்ல சக்தியை பிரார்த்திக்கிறேன்.

இரண்டாவது நோக்கம் "நாடார் மகாஜன சங்கத்தின் நோக்கங்களை அமுலுக்கு கொண்டுவரல்." இது மிகவும் முக்கியமான நோக்கமாகும். நோக்கங்களை அமுலுக்குக் கொண்டுவராத, கொண்டுவரமுடியாத சங்கங்கள் இருந்தாலும் ஒன்றுதான்; இறந்தாலும் ஒன்றுதான். வேஷத்திற்கும் பெருமைக்கும் வெறும் தீர்மானங்களைச் செய்வதில் பலனில்லை. பொது ஜனங்களை ஏமாற்ற பல தீர்மானங்களையும், சுயநலத்திற்காக அமுலுக்குக் கொண்டுவர சில தீர்மானங்களையுமுடைய தற்கால காங்கிரசின் கதி என்னவாயிருக்கிறது. உண்மையிலேயே பொதுஜன நன்மைக்கான பல தீர்மானங்கள் ஏற்படுத்தி அதை அமுலுக்குக் கொண்டுவர பாடுபட்ட மகாத்மாவின் தலைமையின் கீழிருந்த காங்கிரசுக்கு தேசத்தில் எவ்வளவு யோக்கியதை இருந்தது; பொதுஜனங்களை ஏமாற்ற நிர்மாண திட்டத்தை எழுதிவிட்டுவைத்து, சுயநலத்திற்கான சட்டசபை உத்தியோகம் முதலிய தீர்மானங்களை அமுலுக்கு கொண்டுவரும் சபையாய் காங்கிரஸ் இருப்பதால் அதனிடம் பொதுஜனங்களுக்கும் மதிப்பில்லை. அதனால் பொதுஜன நன்மையும் ஏற்படப்போவதில்லை. இனியும் கொஞ்சகாலத்திற்கு இப்படியே இருக்குமானால் காங்கிரஸ் என்பது ஒரு அருவருக்கத்தக்க ஸ்தாபனமாய்ப் போய்விடும். அதுபோலவே நாடார் மகாஜன சங்கமும் தங்கள் சமூகத்திற்கு ஏற்பட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரப் பிரயத்தனப்படாமல், அச்சங்க வாலிபர்கள் தேச பக்தி என்றும் பொதுஜன நன்மை என்றும் சொல்லித் திரிவதானது சமூகத் துரோகமாவதோடல்லாமல் தாயைப் பட்டினி போட்டுவைத்துக்கொண்டு பிராமண சமாராதனை செய்தவனுக்குச் சமானமாவார்கள். ஆதலால் உங்களது இரண்டாவது நோக்கம் மிகவும் பாராட்டத்தக்கதும் ஓர் பரிசுத்தமான நாடார் வாலிபன் செய்யக்கூடியதுமாகும் என்றே சொல்லுவேன்.

மூன்றாவது நோக்கம் நாடார்களுக்கும் இதரவகுப்பினருக்கும் ஐக்கிய உணர்ச்சியை உண்டுபண்ணுவது என்பது. இது மிகவும் புத்திசாலித்தனமுடையதாகும். அதாவது முதலாவதாக உங்கள் சமூகத்தை முன்னேற்றிக்கொண்டு, இரண்டாவதாக உங்கள் ஜன சமூகத்தின் குறைவுகளுக்குச் செய்யப்பட்ட தீர்மானங்களையெல்லாம் காரியத்தில் நிறைவேற்றிக்கொண்டு, மூன்றாவதாக மற்ற வகுப்பாரிடம் ஐக்கிய உணர்ச்சியை உண்டுபண்ணல் என்பதுதான் காரியத்தில் ஆகக்கூடிய காரியம். அவனவன் வகுப்பு மற்றவகுப்பாரால் தீண்டாதவகுப்பாகவும் சுயமரியாதை அற்றவகுப்பாகவுமாய் இருக்கும்போது மற்றவகுப்பாரிடம் ஐக்கிய உணர்ச்சி எப்படி உண்டாக முடியும்? மற்றவகுப்பார்தான் எப்படி ஐக்கியமாயிருக்கச் சம்மதிப்பார்கள்? ஆதலால் இதை மூன்றாவதாக வைத்தநோக்கமும் பிரயத்தனமும் மிகவும் சரியானதே:—

நான்காவது வாசகசாலை ஏற்படுத்தல் என்பது. இதுவும் முக்கியமானதுதான். வெறும் B. A. பரீக்ஷையிலாவது M. A. பரீக்ஷையிலாவது பண்டித பரீக்ஷையிலாவது கனபாடி பரீக்ஷையிலாவது சிரோமணி, மஹாமஹோபாத்தியாய பரீக்ஷையிலாவது அறிவு வரவேவராது. இவ்வளவும் படித்து முட்டாள்களாகவும் அயோக்கியர்களாகவும் வெகுபேர் இருக்கிறார்கள். இவைகள் ஒன்றும் படிக்காத, கையெழுத்துக்கூடப் போடத்தெரியாதவர்களுள் புத்திசாலிகளும் யோக்கியர்களும் பலர் இருக்கிறார்கள். புத்தகப்படிப்பு வித்தையாகுமே தவிர கல்வியாகாது. பல புத்தகங்களை வாசித்த ஒருமனிதனும் சரி, பலபுத்தகங்களை உடைய ஒரு அலமாரியும் சரி, இரண்டும் ஒன்றுதான். பெயரில்மாத்திரம் தான் வித்தியாசம். அதாவது முன்னையது நடை அலமாரி; பின்னையது நிலை அலமாரி. பல புஸ்தகங்களைப் படித்து அவைகளில் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளித்து பரீக்ஷையில் தேறின மஹாமஹோபாத்தியாய-பண்டித பட்டம் பெற்றவனும் ஒன்றுதான்; பல வழிகளில் செருப்புத்தைக்கும் வழிகளை அறிந்து அதுசம்பந்தமான கேள்விகளுக்கு பதிலளித்து, பரீக்ஷையில் தேறி அதில் பட்டம் பெற்றவனும் ஒன்றுதான். புத்தகத்தைப்படித்து ஒப்புவிப்பது மனப்பாடவித்தை, செருப்பத்தைத்துக் காட்டுவது தொழில்வித்தை, இருவரும் 'வித்தை'யாளர்களே தவிர கல்வியாளர்கள், அறிவாளர்கள் ஆகமாட்டார்கள். உண்மையான கல்வியாளர்களாக வேண்டுமானால் உலகஅனுபவத்தையும் இயற்கை அனுபவத்தையும் அறியவேண்டும். இதை உத்தேசித்தேதான் "ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" என்றும் "உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றும் கல்லாரறிவிலாதார்" என்றும் நாயனார் சொல்லியிருக்கிறார். ஆதலால் இவ்வித அறிவுப்பெருக்கத்திற்கும் கல்விக்கும் சங்கமும், யாத்திரையும் வேண்டும். உலகயாத்திரைக்குச் சக்தியற்றவர்கள் பல தேச வர்த்தமானங்களையாவது அறியவசதி ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்குதான் வாசகசாலை என்பது.

(தொடரும்.)

சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை

அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இறுமாப்பும் படைத்துள்ளவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்திப் பாரத உலகத்திலே சமத்துவத்தைநிலை நாட்டுவான் பொருட்டு போராடுதற்கென, அக்ஷய-ஹூ சித்திரை-மீ 1-ந் தேதியிலிருந்து வெளிவருவது; ஒவ்வொரு தமிழ் மக்களாலும் ஆதரித்துப் போற்றத்தக்கது,

வருடசந்தா தபாற்செலவுடன் ரூ. 2.

வீ. அருணாசலம்,

நெ. 52. செட்டித் தெரு, கொழும்பு.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டேயிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.

பண்டித எஸ். எஸ் ஆனந்தரின்

மஹாசந்தனாதித்தைலம்.

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெய்யில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம்மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும், ஆங்கில மருத்துவர்களும், ஐகோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப்பு பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 2—4—0
6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1—3—0

தமிழ் மருத்துவ சாலை,
220. தங்கசாலைத் தெரு, சென்னை.

குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள எக்கின் பாதம்கம்பெனி புஸ்தக சாலைகளிலும்

கோயமுத்தூர்—ஸ்ரீ எ.ஆர். சிவானந்த முதலியார்
சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ
திருப்பூர்—ஸ்ரீ என். ராமசாமிநாயக்கர் மானேஜர் காந்தி கதராலயம்
திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை, திருச்சிக்கோட்டை.
கும்பகோணம்—ஸ்ரீ கா. கு. நீலமேகம் பிள்ளை, சுருட்டு வியாபாரம், பெரியகடைத்தெரு.
திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.
நாகபட்டணம்—ஸ்ரீ எருசக்கரபாணி பிள்ளை, கன்னாரப்பட்டரை.
மதுரை—நியூஸ் ஏஜண்டு, நவினிய பஜார்,
விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.
மதராஸ்—நியூஸ் அண்டு அட்வர்டைசிங் ஏஜண்டு, நெ. 31 நம்பையர் வீதி
கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் ஜித்தார்த்த. புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு.
தூத்துக்குடி—நியூஸ் ஏஜண்டு.
ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை C|o போர்கியோ மோட்டார் (லிமிடெட்.)
சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் நியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி ரோட்

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

உண்மையான கதர்! கெட்டியான கதர்!

—:○:—

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடை பெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.)

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி,
மானேஜர், ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

மாலினி.

மிகு ரகசியமான ஓர் கதை. இப் புஸ்தகம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் முக்கியாவசியமானது. இதில் பொறுமை, சாந்தம், நல்லொழுக்கம், அடக்கம், அன்பு, கற்பு, நட்பு முதலிய அரிய பெரிய விஷயங்களை அசட்டை செய்பவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கே இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும். புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள்.

அதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்.

காப்பு திரவியம்	—ரூ. 2,706.
மூல திரவியம்	— ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது	— ரூ. 64,600,
வசூலிக்கப்பட்டது	—ரூ. 35,540.
டிபாசிட்டுகள்	—ரூ. 42,012–14–0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்சேட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற்கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நானது 10-2-26-ல் வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளிலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும் அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

10—2—26.

ஜி. ராமச்சந்திர செட்டி,
மானேஜிங் டைரக்டர்

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.